REGISTER No. M. 120.

ओं.

# JNÂNA BODHINI

## A TAMIL MAGAZINE AND REVIEW.

DEVOTED MAINLY TO

**LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION.**

EDITOR:

M. S. PURNALINGAM PILLAI, B.A.,

*Professor of English, St. Michael's College, Coimbatore.*

**Vol. VII. No. 5.—May 1904.**

CONTENTS.

| | | PAGE. |
|---|---|---|
| T. Vedadrisadasa Moodelear. | **Frontispiece** | |
| Dr. Samuel Smiles | **Editor** | 161 |
| Kamban's Ramayanam | **Pundit T. Vencatarama Iyengar** | 164 |
| History of Education | **VaradaRaja Iyengar, B.A.** | 168 |
| Dharmapala and Manual Training | **Narayanasami Iyer** | 171 |
| Pregnancy | **Jayaram Pillai** | 175 |
| Siva Peruman | **Vasudeva Mudaliar** | 179 |
| Chinnatambi | **K. C. Duraiswami** | 186 |
| Vedanta Desika | **V. K. Rangachariar** | 190 |
| The Grand Old Man of Travancore | **K. C. D.** | 196 |

EDITORIAL NOTES—Defects of Education in India—The Madras Provincial Conference—Death of Mr. Tata—New Wonders of Electricity—Vice-Chancellor of the University of Madras—The National Indian Association.

REVIEWS OF BOOKS—Savitri and Thiruthani Yathirai-Panniru Penmanikal.

ACKNOWLEDGMENT OF BOOKS.

TAMIL MONTHLIES FOR THE MONTH OF APRIL—Chen-Tamil, Viveka Bhanu, and Mathar Manoranjani.

*Madras:*

THE MADRAS LITERARY BUREAU

8, UMPHERSON STREET, B. T.

1904.

Thompson & Co., Printers, Madras.

THE

# Madras Literary Bureau.

**OFFICE:**

**8, Umpherson Street, Black Town, Madras.**

**PATRONS:**

Diwan Bahadur The Hon'ble Justice Sir S. Subramania Aiyar, K.C.I.E., F.M.U.

Divan Bahadur P. Rajarathna Mudaliar, C.I.E., F.M.U.

T. Vedadrisadasa Moodlear, Esq.

(*Retired High Court Judge of Travancore*)

**Honorary Corresponding Members.**

T. Ramakrishna Pillai, Esq., B.A., F.M.U., F.R.H.S.

G. Subramania Iyer, Esq., B.A.

V. Kanakasabhai Pillai, Esq., B.A., B.L.

J. M. Velu Pillai, Esq., F.M.U.

T. Balasundara Mudaliar, Esq.

**SECRETARY:**

K. C. Duraisami, Esq.

**REPRESENTATIVES:**

Throughout Tamil Districts.

**ORGAN:**

The 'Jnana Bodhini' (ஞானபோதினி).

(A Tamil Monthly Magazine and Review, mainly devoted to literature, Science, Philosophy and Religion).

The '*Madras Literary Bureau*' has the following seperate Departments :

1. Printing and Editing.
2. Translation.
3. Newspaper.
4. Contribution.
5. Copying and
6. General Agency.

The '**Bureau**' Edits and Prints Books, &c., for authors and publishers; passes proofs through the press.

The '**Bureau**' purchases Tamil MSS. of Romance, Novel, Fairy Tales and Detective Stories for publication.

The '**Bureau**' undertakes to translate all kinds of works into Tamil.

The '**Bureau**' is quite prepared to take Sale and Sole Agency of Books.

**SOME PRESS NOTICES.**

" Madras, misnamed the Benighted Province, has once again taken the read in the establishment of an institution, which, supplying a great want in other parts of the civilised world, has singularly enough not been hitherto known in India. We welcome the attempt of our Madras compatriots to start a Literarv Burneau in their midst. It is to consist of six separate departments, of which *the Translation and the Contribution department and the General Agency may be useful even people in other parts of the land.* We heartily wish the Bureau every success."—*The Citizen (Allahabad)* 23rd *May* 1904.



திருமணம்

வேதாத்திரீசதாச முதலியார்,

திருவாங்கூர்.

1820-ம் ௵ பிறந்தவர்.

# ஞானபோதினி

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்—திருக்குறள்.

சம்புடம் VII. } 1904-ம் ஷு மேமீ { சஞ்சிகை 5

## Dr. SAMUEL SMILES.

## டாக்டர் சாமுவேல் ஸ்மைல்ஸ்.

டாக்டர் ஸ்மைல்ஸ் சென்ற ஏப்பிரல் மாதம் 18உ காலஞ் சென்றனர். இவருக்கு வயது தொண்ணூற்றிரண்டு. இவரையறியாதவரிலர். இவருடைய தன்னுதவி, இலட்சணம், வாழ்வு என்ற புத்தகங்களை வாசியாதவர் இந்து தேசத்திலில்லையென்று திட்டமாகச்சொல்லலாம். இவற்றைப்படிப்பதால் பிள்ளைகளுக்கு அறிவுவிருத்தியும் நல்லொழுக்கமும் உண்டாம். இவற்றையாக்கியோர் பிரபல வித்வான் இல்லாதபோதிலும் அனைவரும் வாசித்துப்பலன் பெறும் விதத்தில் புத்தகங்களை வரைந்துள்ளர். இவர் வாலிபருக்கும் ஏழைகட்கும் தரித்திரருக்கும் பெரு நண்பர். இலகுவான நடையில் அழகான விதமாய் உண்மைகளைப் புகட்டும் புத்தகங்களை இவராக்கிய படியால் இவர் நூல்கள்வாலிபரின் புத்தகத்தொகுதியுள் காணுதிரா. இவற்றைக் கவனத்துடன் வாசிப்போர் வெகுநாளனுபவத்தைச் சின்னாட்களிலடைதலுமன்றி உலக வாட்கைக்குரிய விஷயாதிகளையும் நன்கு அறிந்து உலகொப்ப நடப்பர்.

இவர் 1891ம்-ஷு முதல் விருத்தாப்பிய மிகுதியால் வெளி வருவதில்லை. இவர் ஆரம்பத்தில் வைத்தியராயிருந்தனர். வைத்

தியக் கல்வி கற்று ஸ்காத்லாந்து தேசத்தில் ஹாடிங்கடன் என்ற தம்மூரில் இரணவைத்தியராய் சில்லாண்டுகளமர்ந்திருந்து பின்னர் பத்திராசிரியர் ஆயினர். இவர் லீட்ஸ் டைம்ஸ் என்ற பத்திரிகையை முதலில் நடத்தினர். 1845ம்-ஹூ லீட்ஸ் தர்ஸ்க் ரெயில்ப்பாதை காரியதரிசி வேலை இவருக்குக் கிடைத்தது. இவர் பத்து வருஷகாலம் இந்த வேலையைப்பார்த்து விட்டு, தேன்கீழ் ரேயில்ப்பாதைக்கு மாற்றிக்கொண்டனர்; பத்து வருஷங்கழிந்ததும் அந்த வேலையை விட்டு நீங்கினர். இவருடைய திறமையை மெச்சி இவருக்கு எடின்புரோ சர்வகலாசாலையார் 1878ம்-ஹூத்தில் எல். எல். டி. பட்டம் அளித்தனர். இவர் குவார்ட்டர்லி ரிவியூ முதலான பத்திரிகைகளுக்கு அடிக்கடி எழுதி வந்தனர். இவர் ஆக்கிய புத்தகங்களின் பெயர்களையும் அவை வெளிப்பட்ட வருடங்களையும் இவண் தருகின்றும்.

1838. "உடற் கல்வி, பிள்ளைகளை வளர்த்தலும் மேல் பார்த்தலும்." (Physical Education, or Nurture and Management of Children).

1845. "அயர்லாந்து சரித்திரம்"—(History of Ireland)

1849. "ரெயில்வே சொத்து: அதன் தற்கால நிலைமை"

(Railway Property: Its Conditions and Prospects)

1857. "ஜியார்ஜ் ஸ்டீபென்சன் ஜீவிய சரித்திரம்."(Life of George Stephenson). இவர் பெரிய இயந்திராப்பியாசி, நிலக்கரி வியாபாரி. சேம விளக்கு ஒன்றை நவமாகச் செய்ததற்காக ஆயிரங்கினி இனும் பெற்றவர். இராக்கேற்று என்ற காற்றுக்குழாயமைத்தநேர்த்தியானசூத்திரவண்டியை ஆக்கியதற்காகஐந்நூறு பவுன் பரிசு பெற்றவர். 1848ம்-ஹூ 67-ம் பிராயத்தில் காலஞ்சென்றவர். இவரைப்பற்றிய புத்தகம் ஒரு வருடத்தில் ஐந்து பதிப்புச் செலவாயிற்று.

"தன்னுதவி" (Self-Help) நம் வாலிபர் கையிலுள்ளது, அநேக பாஷைகளில் மொழிபெயர்க்கப்பெற்றது.

1861. "வேலையாட்களின் சம்பாத்தியம், வேலை நிறுத்தல், கூலி" "எஞ்சினீர்களின் சரித்திரங்கள்" (Workmen's Earnings, Strikes and Wages, and Lives of Engineers).

1863. "கைத்தொழில் ஜீவியசரிதை" (Industrial Biography)

1865. "போல்ட்டன, வாட் ஜீவிய சரிதைகள்" (Lives of Boulton and Watt).

1868. "இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் ஹியூகோநாட்ஸ்களின் புதுக்குடிகள், கோவில்கள், கைத்தொழில்கள்" (The Huguenots: their Settlements, Churches, and Industries in England and Ireland).

1871. "இலட்சணம்" (Character). இது தன்னுதவியின் சகாவெனலாம்.

1874. "நான்ஸ் விளம்பரம் ரத்தான பின் பிராஞ்சுதேசத்திலுள்ள ஹியூகோ நாட்ஸ்களின் நிலைமை, வாடோவாய் தேசவிஜயம்" (The Huguenots in France after the Revocation of the Edict of Nantes; with a Visit to the Country of Vaduvois).

1876. "ஸ்காத்லந்து சராசர நூலாசிரியன் ஜீவிய சரிதை" (Life of a Scotch Naturalist)

1878. "வர்த்தகனும் லோகோபகாரியுமான ஜியார்ஜ் மூர்." "தாபர புவனகோளசாஸ்திரியாகிய ரபர்ட் டிக்கின் ஜீவிய சரிதை" டிக் முதலில் தர்சோபட்டணத்திலுள்ள உறட்டிக்காரன் (George Moore, Merchant and Philanthropist. Life of Robert Dick, Geologist and Botanist).

1880. "கடமை"—"தைரியம், பொறை, தாங்குகை, இவற்றைப் பற்றிய திருஷ்டாந்தங்களுடன்" (Duty, with Illustrations of Courage, Patience, and Endurance).

1891. "நாவிதன், கலைஞன், லோகோபகாரி எனற ஜாஸ்மின்"—(Jasmin, Barber, Poet and Philanthropist).

இவையன்றி, 1883ம்-வூ ஜேம்ஸ் நாஸிமித்தின் தற்சரித்திரம் என்பதையும் பதிப்பித்து பிரசித்தஞ்செய்தனர்.

பத்திராதிபர்.

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

# KAMBAN'S RAMAYANAM.

## கம்பன் இராமாயணம்.

---

இக்காலத்தில் வடமொழி தென்மொழியென வழங்கிவரும் ஆரியம் தமிழென்கிற இரண்டு பாஷைகளும் காலபுருஷனின் காலில் மிதியுண்டு அழியா வண்ணம் அவைகளைக்காத்து நமக்களித்தோர் புத்தர்களும் ஜயினர்களுமேயாம். சமயக் கோட்பாடுகளில் இவர்களோடு மாறுகொண்ட வைணவர் சைவர்களும் பின் காலத்தில் சித்தாந்த வேதாந்த விஷயமாயும் பல நூல்கள் செய்தனர். தமிழ் மகளின் வடிவமும் நடையழகும் வண்ணமும் தேககாந்தியும் மணமும் அணிகளும் ஜயினர் காலத்தைய தமிழ் நூல்களில் இனிது விளங்கின. இக்காலத்து ஆடை அணி நடை உடை பாவனைகளும் புறநாட்டு வாசனையும் நோக்கங்களும் மலிந்து விளங்குதல்போல் பின் காலத்தில் தமிழ் மகளின் வடிவமும் நடைப்போக்கும் அணியினங்களும் மணமும் வெளி வேஷங்களும் மாறுதலடைந்தன. இம் மாறுதல்களினால் தமிழ் மகளுக்குத் தனித் தொளிரும் சுயஞ்சோதி யுளதோ வெனப்பலர் ஐயமுறும்படியான நிலைமையும் வரலாயிற்று. வடமொழியிலுள்ள பலநூல்கள் தமிழ்மகளின் வாய்மொழியால் வெளியாகி நடை பெறுவதாலும் வடமொழிப் பரிபாஷைகளும் நியாயங்களும் தொடர் மொழிகளும் அவ்வாய் மொழிகளோடு கலந்து வழங்கப்படுவதாலும் தமிழ்மகளின் சுயஞ்சோதி மழுங்குதற்குக் காரணமாயிற்று. சுபாவத்தில் அழகில்லாதவோர் பெண்ணிற்குப் பல்லாடைகளும் அணிகளும் தாங்கற்கரிய பாரமா மத்தனையே யொழிய வடிவத்தையும் எழிலையும் சிறப்பிப்பன வல்லவாம். மதிநுட்பமுடன் பிறந்தார்க்கே தமிழ்மகளின் சுபவடிவமும் அழகும்சோதியும் இனிது விளங்கும். இவை யனைத்தும் கட்புலனால் கவரப்படாது உட்புலனாகும் புத்தியுணர்வினாலே பகுத்துரைக்கப்படும். இவ்வாறு பகுத்துணர்வோர் சிற்சிலரேயாம். அரசர் மொழியில் இக்காலத்துப் பலர் தேர்ச்சி பெற்றுப் பட்டப்பெயர் வாய்ந்தவர்களானாலும் அவர்கள் பேசும் எழுதும் தமிழெல்லாம் தமிழ்மணமின்றிச் சக்கையாய் ஆங்கில மணமே வீசுவதாம். கருத்து ஆங்கிலப் போக்குள்ளதானாலும் தமிழ் மணங் குன்றுமேல் அது தமிழாகுமா! பழையன கழிதலும் புதியன

புகுதலும் காலகதியால் எப்பாஷைக்கும் உரித்தாயினும் பழைய நடையையும் சோதியையும் எழிலையும் அழியவிடாது புதியன போற்றுதலே சிறப்புள்ளதாம். பழய நலம் முற்றுமழியப்பெறின் கலி புருடன் புதுமை பொன்றனையே பாராட்டி நமதிடம் அதிக நட்புக் கொண்டனன் என்பதன்றி வேறுண்டோ? இவ்வகை அதிக நட்புறில் தமிழ்மகளினழகும் சோதியும் தலையெடாது முற்று மழியுமன்றோ.

ஆரியர் தமிழ்நாட்டிற் குடியேறிய பின்பு கம்பன் இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இராமாயணத்தை விருத்தப்பாவாற் பாடினன். சொற்சுவை பொருட்சுவைகளுடன் கவியமைப்பதில் யாரும் நிகரில்லாத கவி யிவனேயாம். இவனைக் கவிச்சக்ரவர்த்தியெனவும் கம்பநாட்டாழ்வாரெனவும் நமது முன்னோர் வழங்கிவந்தார்கள். கல்வியிற் பெரியவன் கம்பனென்பதும் உலகவழக்கு. இவன் கவிகள் தமிழ்க்குற்றமெல்லாம் அராவும் அரமெனலும் கம்பனுடன் கவிதையிற்போல் கற்றோர்க்கு இதயம் களியாதென்பதும் தமிழுணர்ந்த பெரியோர் வாக்கன்றோ. வான்மீகிமுனிவர் பாதநான்கும் வகுத்து வடமொழியில் ஆதிகாவியமாம் இராமாயணம் பாடினுரெனினும் தமிழ்ப்பாஷையில் அக்கதையைச் சுவைப்பாற்படுத்திச் சிற்சில விஷயங்களைக் கூட்டியும் குறுக்கியும் அணிபெறச்செய்தவன் இவனேயாம். இராம கதைப்போக்கில் மகா நாடகச்சுலோகங்கள் கருத்தமைதியிலும் சுவையிலும் சிறப்பன போலவே கம்பன் கவிகளும் தமிழிற் சிறப்புடையனவாம். கவி பாடுவதில் கம்பன் மனோதருமம் விசித்திரமான நெறியுள்ளதாம். இவன் பிறர்கருத்துக்களையும்போக்கையும் அணிகளையும்தனக்குவழிகாட்டிகளாகக் கொள்ளாது தன் மனதிலிருப்பதைச் சுயமாய் அமுதொழுகுவதுபோல் கூறும் சுயஞ்சத்தி நிறைந்த புத்திமான். நவரசமென்பது இவனிடம் கொழிக்கும் வற்றாதகடல் களாம். இவன் வேறு கவிகளிடம் ஏற்பது இகழ்ச்சியென விட்டுவிட்டனன் போலும். இதுவே யிவன் போக்கு. வடமொழிக் கவிகளுள் காளிதாசன் தலைமை பெறநிற்றல்போல் கம்பன் தமிழ்க்கவிகளுள்முதன்மையுடையவனுதலின் கம்பனைத் தமிழில் காளிதாஸனெனலுந் தகுதியதாம்.

இவ்வளவு சிறப்புவாய்ந்த கம்பன் கவிகளின் பொருள்நயமும் ஆழ்ந்தகருத்தும் சித்திரமும் அவன் ஜீவித்திருந்த காலத்திற்றானே

னையோரால் மாற்றி யுரைக்கப்பட்டதென்றால் இக்காலத்திலும் அவ்வாறு மாற்றியுரைத்தல் சகஜமேயாம். மதப்பேய்கள் இடை இடையே புகுந்து மூலபாடத்தையும் உருக்குலைத்து விட்டன. இவ்வாறாயினும் பரம்பரையாய் கம்பன் இராமாயணத்தைப் பிரசங்கம் செய்து வந்த குடும்பத்தில் பிறந்து கல்வியும் புலமையும் வாய்ந்தாரிடத்துச் சுத்தமாகிய மூலபாடமும் கருத்தும் ஒருவாறு பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. தமிழ் நன்குணர்ந்தார்க்கு உரைக்கப்படும் கருத்தின் நயம் தோன்றுமற்பேர்காது. கல்விச்செருக்கும் மதப்பேயும் தலைநீட்டில் நற்கருத்தும் தலைகாட்டாது தீக்கருத்தாக மாறிவிடும்.

இலக்கணக் கொத்தும் உரையும் செய்த சாமிநாததேசிகர் நன்னூல் சின்னூல் அகப்பொருள் அலங்காரம்முதலிய இலக்கணங்களையும் பத்துப்பாட்டு எட்டுத்தொகையும் பதினெண் கீழ்க்கணக்கும் இராமன்கதை நளன்கதை அரிச்சந்திரன் கதைகளும் விரும்பற்குரிய நூல்களல்லவென்றும் அவைகளிற் பழகுவோர் வீண் நாள் கழிப்பரென்றும் வாளா கூறினர். சமயச் செருக்கிருந்ததற்கு இது சான்று. ஓர் பாஷையிற்றேர்ச்சிபெற முயலுவோர்க்கு அப்பாஷையிலுள்ள புராதன நூல்கள் இன்றியமையாத சாதானங்களாம். பாஷை நூல்களிற் பழகுவோர் அந்நூல்களிலடங்கிய சமயக்கோட்பாடுகளை யநுட்டிக்கவேண்டு மெனும் நியமமில்லை. அந்நியமம் அச்சமயத்துள்ளார்க்கேயாம். கிறிஸ்தவரின் வேத புஸ்தகத்தைப் பாஷை நயங்கருதிப்படிப்போர் நம்மவரிற் பலருண்டாயினும் அவர்கள் கிறிஸ்து மதத்தவரல்லர், வடமொழி வேதங்களும் உபநிடதங்களும் வீட்டு நெறியைச் சுட்டுவனவாயினும் அவைகளுள் இனிது விளங்காத விடயங்கள் ஆழ்வார்கள் நாயன்மார்களின் பாடல்களில் சுவாநுபவ வழியால் இனிது விளக்கப்பட்டிருக்கின்றன. வைணவப் பிராமணர்களில் உபயவேதாந்தங்களும் வழங்கப்படுகின்றன. இவைகள் புதியன புகுதலால் வந்தனவாம். பவுத்தர் ஜயினர்களின் பழைமையான நூல்களின்றேல் வைணவர் சைவர்களுக்குவடமொழி தமிழ்மொழிப் புலமை வாய்ந்திராது. இவ்விரு சமையத்தார்களும் செய்துள்ள வேறு நூல்கள் அவ்வகைப் பழைய நூல்களின் பழக்கத்தால்பாடப்பட்டனவாம், சைவ சமயப் பற்றுள்ளார் தொல்காப்பியத்தையும் குறளையும்

அதற்குப் பரிமேலழகர் செய்தவுரையையும் மற்றைய வேறு மூன்று நூல்களுடன் சேர்த்து ஓராறுநூல்களைமட்டும் தமிழின் மேலாந்தரமாம் நூல்களாகக்கொண்டது வியப்பே. அதற்குச் செய்யுள்.

### நேரிசை வெண்பா.

வள்ளுவரன்பர் மொழிவாசகந் தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—யொள்ளிய சீர்
தொண்டர் புராணந் தொகைச்சித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்.

தமிழர்க்குக் கதியாகும் நூல்க ளிரண்டெனக்கொண்டு அவைகளைச் செய்தோர் கம்பனும் திருவள்ளுவருமெனக் கூறுதலும் நமது நாட்டு வழக்கு. கம்பன் கவிகளின் நயம் அவைகளிற் பாடுபட்டுப் பெரியோரிட மண்டிப் பொருள் கேட்டுச்சிந்தனை செய்யப்பெற்றார்க்கே இனிது விளங்கும். ஏனையோர்க்கு விளங்கா. பிரவேசம் போலியாகாது உண்மையாயிருக்கினன்றோ சுகம் விளைப்பதாகும். காண்டங்கள் தோறும் சொல் நயம், பொருள் நயம், சித்திரம், வெங்கியம், ரசம், சுகுமாரதையுள்ள சிற்சில பாடல்களைத் தொகுத்து "ஞான போதினிப்" பத்திரிகையில் மாதந்தோறும் பிரசுரம்செய்யப்படும். கம்பன் கவிகளில் பல நயங்கருதி அவைகளைப்போற்றி வரும் தமிழுணர்ந்த தமிழ்நாட்டு நண்பர்களும் காண்டங்கள் தோறுங் கண்டு களித்த விசேஷ நயமுள்ளபாடல்களைச்சுட்டிஉரையெழுதி வெளிப்படுத்த முன் வருவரேல் அடியேன் கைக்கொண்ட இப்பணி விரைவில் நிறைவேறுமென்று நம்புகிறேன்.

### அறுசீ ராசிரியம்.

விருத்தமெனு மொண்பாவி லுயர்கம்பன் நவரசங்கள் விளங்கச்சொற்ற
கருத்தினயஞ் சித்திரமும் வெங்கியமும் சேர்ந்தொழுகுங் காண்டப்பாக்கள்
பெருத்தொளிரு மமுதகட லிடையெடுத்த சில கடங்கள் பேணிப்போற்ற
வருத்தியுடன்வெளிவைத்தேனருந்தமிழின்சுவைதெவிட்டாதுணருவார்க்கே.

இங்ஙனம், தமிழ்ப்பண்டிதர்,

தி. வேங்கடராம ஐயங்கார்.

# THE HISTORY OF EDUCATION.

## கல்வி வரலாறு.

---

கல்வியென்பது தன்னை வெளிப்படுத்துதலாம். உள்ளடங்கிய அந்தக்கரணங்களை சிறிது சிறிதாக புத்தகங்களை வாசித்தலாலும் உலக வனுபவங்களாலும் வளர்த்து வெளியே தோன்றச் செய்தல் அவசியம். அஃதும் ஏதேனும் நன்மை கருதிச்செய்தல் விசேடம். நன்மை கருதி ஆன்மாவை வெளிப்படுத்தலே நாகரீகம். கலாபால னம்நான்குவகையாகப்பிரிக்கப்பட்டுளது. கொடுங்கல்வி, கொச்சைக் கல்வி, நாகரீகக்கல்வி, தயாளக்கல்வி-இவையே நான்கு பாகுபாடாம்.

1. கொடுங் கல்வி:—இதைக் காட்டாளர் கல்வி என்றுஞ் சொல் லலாம். மனிதர்கள் காடுகளில் வசித்த காலத்தில் கல்வியென்பது ஒருவர் செய்ததுபோல் மற்றொருவர் செய்தலாம். பாவனையும் பார்த்தலிலும் கேட்டலிலும் அமையும். பசியுங் கர்மமுமே காட்டு மனிதர்களின் முக்கியவுணர்ச்சிகளாம். அனனமும் ஆடையும் தங்கு மிடமும் முதல் முதல் வேண்டியன. இவை கிடைத்தபொழுது பிள்ளைகளைப் பெறுதலும் குடும்ப வின்பங்களை யனுபவித்தலும் ஆதிய எண்ணங்கள் தோன்றும். சுயலாபம் முன்னதன் கருத்தாம். பிறர் நயம், பிறர் வாஞ்சை பின்னதால் விளையும். தம்மையும் குடும் பத்தையும் காப்பாற்ற வேலை செய்தலவசியமாகும். தங்களுக்கு இடுக்கண் வராதிருத்தற்பொருட்டு தேவாம்சங்களைத் தொழுதல் பின்னர் ஏற்படும். மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள வித்தி யாசம் வேண்டியனவற்றைத் தக்கவுபாயங்களால் சேகரித்தலே. வேலை செய்யக்கருவிவேண்டும், சாமான் வேண்டும். கருவிகள் செய் வதில் கட்டை, கல், கழிமண், எலும்பு, உரோமம், நார், தோல், இவை உபயோகப்படுகின்றன. நெருப்பையும் உலோகங் களையும் காட்டாளன் அறியான். அவன் அன்பு தன் குடும்பத்தார் ஜாதியார் இவரை மிஞ்சிபதாகாது. மிஞ்சினல் ஆடு மாடு நாய் கோழி முதலானவற்றையும் பிதிர்களையும் பாராட்டுவான். இரத்தப்பற்று ஒன்றே அவனுக்குத் தெரியும். ஆகாராதிகளுக்கும் ஆவிகளுக்கும் அவன் அடிமையாவான்.

காட்டாளர்கள் வஸ்துக்களை உபயோகப்படுத்தவறிந்தவர்களே யன்றி சத்துக்களை உபயோகப்படுத்த அறிந்திலர். நெருப்பைக் கண்டுபிடியாததால் உணவுகளை சமையல் செய்யாமல் தின்றனர். தேசாந்திரிகளாய் குகைகளிலும் சமயத்திற்காக வமைத்த குடில்களிலும் காலத்தைக் கழித்தனர். வேட்டை மீன்பிடித்தல் இவற்றிற்கு வேண்டிய கருவிகளை ஆக்கலும் மண்பாண்டங்கள் ஆடைகளைச் செய்தலும் அவர்களுடைய கைத்தொழில்களாம். வழக்கமே அவர்களுக்குச் சட்டம். பேய் வணக்கமே மதக்கொள்கை.

2. கோச்சைக் கல்வி:—இது அநாகரீகக் கல்வியாம். அப்பு வாயு தேயு இவற்றைக்கொண்டு தங்களுக்கு வேண்டியனவற்றை ஆக்கிக் கொள்ளுஞ் சத்தி பெற்றவர் அநாகரீகர். இவர்கள் காணும் பொருள்களிலெல்லாம் பூதங்களிருக்கும் என்று பயந்து மந்திர சத்தியைத் தேடுவா. தீயுண்டுபண்ணத் தெரிந்ததால் உணவை வேக வைக்கவும் உலோகங்களை உருக்கிக் கருவிகள் செய்பவும், ஆக்கிய கருவிகளால் கல்வெட்டி யெடுத்து கற்பணி செய்பவும், வீடுகளும் பட்டணங்களும் கட்டவும், நிலத்தை யுழுது பயிர்செய்யவும், ஆயுதங்களைச் செய்யவும் அறிந்தனர். தேசாந்திரியத்தை ஒழித்து நாடுகளில் தங்கினர். பிறருதவி இன்றியமையாததென்று கண்டனர். தச்சர், கொல்லர், கம்மாளர் இவர்களுக்கு ஐக்கிய முண்டாயிற்று. வேலைப்பகுதியின் இலாபமறிந்தனர். இரத்தப்பற்று மட்டுமன்றி இடப்பற்றுந் தொழிற்பற்றும் ஏற்பட்டன. கண்ணுக்குப் புலப்படாத மாயா ரூபிகளை வணங்குவோர் குருக்களாயினர். ஆகாராதிகளை விளைவித்தவர் கிருஷிகளாயினர். விளைந்த பொருள்களையும் மக்களுயிரையுங் காப்பாற்றினவர் காவலாளிகளாயினர். இம்மூவகுப்பினருள் நாம் பெரியர் அவர் பெரியர் என்ற ஆணவங்கிளம்பிற்று. கிருஷிகள் பின் வாங்கினர். முதலிரண்டு வகுப்பினருக்கும் சண்டை பலத்தது. சண்டையின் முடிவு முத்திறத்ததாயது. 1. இந்தியாவில் குருக்கள் சித்திபெற்றனர். தேவவபராதம் வரும் என்று பயமுறுத்தி ஆட்சிபெற்றனர். 2. அஸ்ஸிரியாவில் காவலாளிகள் அதிகாரம் பெற்றனர். புஜவலியே இதன் காரணம். 3. ஈஜிப்த்தில் இருதிறத்தாரும் அதிகாரஞ் செலுத்தினர். முத்திறத்தாரும் தங்கள் தங்கள் தொழிற்குரிய கல்வியைக் கற்று வந்தனர். கீழ்ப்பணிந்து

தொழிற் செய்தலே அன்னார் கல்வியின் பயனும். இங்ஙனம் தொழிற் சாதிகள் ஏற்பட்டதால் குருக்களுக்குப் போதுமான அவகாசங் கிடைத்தது. வான சாத்திரம் சோதிட சாத்திரம் இவற்றை அறிந்தனர். எழுதிவைத்தனர். நெருப்புண்டுபண்ணத் தெரிந்தது போல எழுதவுந் தெரிந்துகொண்டனர். முன்னதனுல் தொழில்கள் வளர்ந்தன. பின்னதனுல் கலைகளுண்டாயின. முதலில் எழுத்து சித்திரமாயிருந்தது. ஆயிரக்கணக்காக வருடங்கள் கழிந்தபின் சித்திரவெழுத்து மாறி சப்த எழுத்துவுண்டாயிற்று. முன்னோர் சரித்திரங்களையும் பாட்டுக்களையும் சட்டங்களையும் செங்கற்களிலும் க்ற்களிலுந் தற்காலங்காணுகின்ருே மன்ருே. வாசிக்கத் தெரிந்தவர்கள் குருக்கள் மட்டுமே. ஆதலால் அவர்களே கல்விக் களஞ்சியமாயினர். அவர்கள் பூஜைசெய்யுங் கோவில்களே பள்ளிக்கூடங்களாயின. அவர் கற்றுக்கொடுத்த தெல்லாம் வேதசாத்திரமே. இதுவே வீண்பத்திக்கும் அஞ்ஞானத்திற்கு மூலமாயிற்று: மாயாசத்திகளுக்கெல்லாம் மனிதவுருப்புக்களையுங் குணங்களையும் ஏற்றியமைத்தனர். பலகோடி தேவர்களையாராதித்தல் அவர்களுக்குக் கொடை கொடுத்தல் முதலியன வழக்கத்திற்கு வந்தன.

அநாகரீகக்கல்வி பெற்றஜாதியார் அறுவர் எனலாம். சூமிர் அக்காடு, ஈஜிப்து சீன தேசத்தாராதிய துரானியர் எனப்படுவர். பாபிலோனியா, அஸ்ஸிரியா தேசத்தாரிருவரும் செமிட்டிக் வகுப்பாராவர். இந்தியா, மீதியா, பெர்ஷியா தேசத்தார் ஆரியராவர். இம்மூத்திறத்தாரின் கல்வி நாகரீகம் வேறுபடும். துரானியர் பெரியவான சாஸ்திரிகள், எழுதும் வகைபைக் கண்டு பிடித்தவர்கள். செமிட்டிக் வகுப்பார் மதஸ்தாபிகள். மூன்ரும் வகுப்பாராகிய ஆரியர்கள் இராஜ்ஜீய பரிபாலன வழியைத் தெரிந்தவர்கள்.

வரதராஜ ஐயங்கார், பி. ஏ.

(இன்னும் வரும்)

# DHARMAPALA AND MANUAL TRAINING.

## தர்மபாலர்—கைத்தொழிற் கல்வி.

தர்ம பாலர் இந்துதேசப் பிள்ளைகளின் கைத்தொழிற் கல்வி யபிவிருத்தியின் பொருட்டு பல தேசங்களையும் கண்டங்களையும் சுற்றிப் பார்த்து வந்திருக்கின்றனர். முதலில் இவர் பார்த்த தேசம் ஜெப்பான். இத்தேசத்தைப்பற்றி இவர் பேச வாரம்பிக்கும் பொழுது இவர் முகம் ஜொலிக்கின்றது. நாவடங்குவதில்லை, வார்த்தைகள் கான் யாறு போன்று ஒடுகின்றன. கிழ்த்திசைக்கே மணியென் விளங்கும் இந்தத் தேசத்தின் மேல் இவருக்குள்ள ஆர்வம் இவ்வளவு அவ்வளவன்று. ஜெப்பானில் நாலு ஐந்து வயதுள்ள சிறுவர்கள் காயிதப் பூக்கள் செய்வார்கள், பாய்கள் நெய்வார்கள், பாத்ரக்ஷை தயாரிப்பார்கள், கொடைகள் விசிரிகள் முதலான உபயோகமும் அலங்காரமுமான அனேக சாமான்களை ஆக்குவார்கள், அன்றியும், சிறூர்கள் நந்தவனம் வைத்துப் பரிபாலனஞ் செய்வார்கள். விதை விதைத்துச் சிறு புஷ்பச் செடிகளையும் பழவருக்ஷ மரங்களையும் வளர்ப்பார்கள். அந்த நாட்டில் மூடப்பிள்ளைகள் கிடையா. இராஜாங்கத்தாரும் நகர பரிபாலகரும் தாய் தகப்பனில்லாத பிள்ளைகளைப் பராமரிக்கின்றனர். இவர் 1889ம்-ஹு இத்தேசத்தைப் பார்த்த காலத்தில் கைத்தொழில் இத்துணை விருத்தியா யிருக்கவில்லை. மறுபடி 1902-ல் இவர் ஆண்டு சென்றுழி ஏதோ முன் பார்த்திராத புதிய நாட்டில் வந்திறங்கியது போன்றிருந்ததாம். கண்ணாடி விளக்குப் புகைக்குழாய் கூட செய்யத் தெரியா திருந்த அத்தேசத்தார் இப்பொழுது ஆறுயிரம் டன் போர்க்கப்பல்களை அவர்கள் துறை முகங்களில் செய்யும் சத்தி வாய்ந்தவர் என்பது ஆச்சரியப்படத் தக்கதே. ஜெப்பானியரைப் பின்பற்றினுல் இந்தியாவும் முன்னுக்கு வருமென்பதில் தடையில்லை.

பின்னர் இவர் அமெரிக்காவிற்குப் போயினர். மாகாண மாகாணமாகச் சுற்றினர். இளைக்காமல் ஆயிரக்கணக்கான மைல் தூரம் பிரயாணஞ் செய்தனர். சென்ற விடங்களிலெல்லாம் இவருக்கு பசாரம் நடந்தது, எல்லோரும் இவரிடம் பக்ஷமாயிருந்தனர். இவரு

டைய எண்ண மின்னதென்றறிந்து இவருக்கு அநுதாபங் காட்டினர். பல மதங்களையும் விருத்தி செய்யக் கருதிக் கூடும் வருஷாந்தரக் கூட்டமொன்றில் இவர் பிரசன்னமாயினர். கூட்டங் கூடிய விடம் மேயின் மாகாணத்தில் கிரீன் ஏக்கர் என்பதே. ஹப்பார்டுப் பண்டிதர் தொழிற் சாலையைத் தரிசித்து கல்விப் பயிற்சி விஷயங்களில் அநேகம் புதியன கற்றனர். பின்னர் இவர் ஆல்பாமாவிலுள்ள டஸ்கீஜி என்னுமிடத்தில் புக்கர் வாஷிங்டன் என்ற நீகிரோ சீர்திருத்தப் பிரபுவால் 1888 ஹூ ஏற்படுத்தப்பட்டுத் தற்காலம் செழித்துள்ள தொழிற் சாலையையும் பார்த்தனர். பாழுங் கட்டிடமொன்றில் இருபது பிள்ளைகளுடன் ஆரம்பித்த இந்தச் சாலையில் தற்காலம் ஆயிரத்து நானூறு பிள்ளைகள் பயின்று வருகின்றனர். அரண்மனைகள் போன்ற இருபது கட்டிடங்க்ள் இச்சாலையில் போதிக்கப்படும் கிருஷிக் கல்வியின் பயனும். அன்றியும், செங்கல் செய்தல், தச்சுவேலை, இவை மிகுதியாகக் கற்கப்படுகின்றன விசித்திரத்தொழில்களும் யந்திரத் தொழிலும் சாத்திரவாராய்ச்சியும் குறைவின்றி நடக்கின்றன.

இந்து தேசத்தின் தற்கால கேவல நிலையைக்கேட்டு கல்விச் செல்வம் பெருக்கும் பிரமுகர் பரிதாபப்பட்டனர். கூடிய வுதவி செய்வதாய் வாக்களித்தனர். தர்மபாலர் வாஷிங்டன் நகரத்தில் கிருஷி மந்திரியுங் காரியதரிசியுமாகிய கலோவே என்பவரைப்பார்த்துப் பேசினர். இந்நாட்டில் பல தொழில்களும் இழிந்து ஜனங்கள் படும் கஷ்ட நிஷ்டூரங்களைக் கேட்ட மந்திரி தாரை தாரையாய்க் கண்ணீர் சொரிந்தனர். “இந்துதேசம் இறக்கலாகாது. ஏனெனில் இந்து தேசமே உலகெங்கும் ஒளி பரப்பியது” என்றுங்கூறினர்.

இவர் பின்பு டென்மார்க்கு தேசஞ் சென்றனர். ஆண்டுள்ள கிராமங்களில் உழவுத்தொழிற் கல்வி சிறந்து விளங்குவதைக் கண்ணுற்றனர். சிறுவர்களுக்குப் புதுமாதிரிப் பயிரிடுதல் கற்றுக்கொடுப்பதைப் பார்த்தனர். தவிரவும், பௌதிக சாத்திரமும் சித்திரமும் வேலைகளும் தொழிற்சாலையார் கற்பித்து வருகின்றனர். டென்மார்க்கு நாட்டிலுள்ள கிராமாந்தர இல்லங்களிலும் மின்சார விளக்குகளுண்டென்றால் அந்நாட்டின் தொழில் விருத்தியைப் பகரவும் வண்டுமோ முக்கியமாய் ஒன்று இவர் கண்ணிற் புலப்பட்டது.

அது அந்நாட்டுச் சிறுமிகள் புத்தகங்களை ஒளியால் பிரகாசப்படுத்து தலாம். எஸ்கோ வென்ற விடத்தில் ஷ்ரோடர் பண்டிதரை இவர் கலந்தனர். அவருடைய தொழிற்சாலை நாற்பது வருடத்திற்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட தென்றும் ஒரு ஹிந்து வந்து அச்சாலையைத் தரிசிப்பார் என்ற தீர்க்க தரிசனத்தின்படி தர்மபாலர் வந்ததே அதிர்ஷ்ட வசமென்றும் அவர் கூறினர்.

தர்மபாலரின் முயற்சியால் அமெரிக்கா கண்டத்திலுள்ள சர்வ கலாசாலைகளில் அநேகம் இந்தியர்களுக்குச் சம்பளம் பெறுமல் கற்றுக்கொடுக்கச் சம்மதிக்கின்றன. அவற்றிற் சில பின் வருவன. காலிபோர்னியாவில் பேர்க்கிலீ சர்வகலாசாலை, நியூயார்க்கில் கோலம்பியா சர்வகலாசாலை, மாஸாச்சூசேட்ஸில் ஹார்வார்டு சர்வகலாசாலை, சிக்காகோ சர்வகலாசாலை, இவை ஒவ்வொன்றிலும் வருஷாந்தரச்சம்பளம் நானூற்று இருபது ரூபாய். இது பெரிய லாபமே. இஃதன்றி மாணுக்கருக்கும் தொண்ணூறு ரூபாய் மாதச்செலவாகும். சிக்காகோ சர்வகலாசாலையார் மட்டும் இந்திய மாணுக்கர்கட்கு இருப்பு வசதியளிக்கச் சித்தமுளர். கல்கத்தாவிலிருந்து இங்கிலாந்திற்குப் போக பி.ஐக் கப்பற்கூலி இருபத்தேழரை பவுன். இங்கிலாந்திலிருந்து நியூயார்க்கு நகரத்திற்கு யாத்திரைச் செலவு பத்துப்பவுன். இத்தொகை பெரிதன்று. சத்தியுடையவர்கள் கட்டாயமாகக் கவனிக்கவேண்டிய விஷயம்.

தற்காலம் தர்மபாலர் கல்கத்தாவிற்கு (காளிகோட்டத்திற்கு) வந்திருக்கின்றனர், இவருடன் விக்சர்ஸ் என்ற ஒரு பண்டிதரும் வந்திருக்கின்றனர். இவர் உழவு, கைவினை, மின்சாரம் இவற்றைப்பற்றிப் போதிக்கத் தயாரா யிருக்கின்றனர். தவிரவும், தேசப்படங்கள், அங்காதிபாதப்படங்கள், வெளுப்பு, புடவையழுத்தமிடும் யந்திரம், பாற்சாலைக் கருவிகள்—தாழி, அகப்பை, பாற்சட்டிகள்—அழுக்கு வாங்கிகள், குடப்பங்க்கள் தச்சர்சாமான்கள், உழவுக்கருவிகள்,—கலப்பை, பாம்பு, வைக்கோல்வாரி, மண்வெட்டி — காற்றூடி, தகரவேலை ஆயுதங்கள், தோட்டவேலைத் தட்டுமுட்டுகள், சமையற்பாத்திரங்கள், இவைபோன்ற பலசாமான்களைக் கொண்டுவந்திருக்கின்றனர். இவையன்றி, பிள்ளைகளுக்கு விளையாட்டுச் சாமான்

களும், மின்சாரத்தால் ஓட்டுவிக்கும் சிறுபண்டிகளும், மாயா விளக்குகளும் திருஷ்டிக் கண்ணாடிகளும் வந்திருக்கின்றன. இவை களைப் பார்ப்பதே பெருங்கல்வியாம்..

இவர் இத்தேசம் விருத்தியடையும் பொருட்டு தொழிற் சாலை யொன்றை ஏற்படுத்தப் பொருள்சேர்த்து வருகின்றனர். அதில் ஜெப்பான், இற்றலி, டென்மார்க்கு, ஜெர்மனி, இங்கிலாந்து அமெரிக்கா தேசங்களிலிருந்து உபாத்தியாயர்களைத் தருவித்துப் பிள்ளை களுக்குப் பலதரக்கல்வியையும் புகட்டப்போகின்றனராம். அதில் அநேக சுதேசிகளைப் பழக்கிக் கிராமாந்திரங்களுக்கு அனுப்பி நசித்து வரும் பல தொழில்களையும் செழிக்கச் செய்து ஜனங்களு க்கு க்ஷேமம் விளைவித்தலே இவருடைய முக்கிய கருத் தாம். நம்முடைய நாட்டுச் சரக்குகளை அயல் நாடுகளுக்குக் கொண் டுபோய்ப்பணிசெய்து அனுப்பி உயர்ந்த விலைக்கு விற்றலை நாம் தின சரிபார்க்கின்றோம். ஒரு ரூபாய் வீதம் பங்கு சேர்த்தால் கோடி ரூபாய் சடுதியில் சேரும். இதை மூலதனமாக வைத்து நாகரீகம டைந்த இங்கிலாந்து அமெரிக்கா தேசங்களிலிருந்து சூத்திரங்களை யும் யந்திரங்களையுந் தருவிக்கலாம். இளைஞர் இவற்றை யுபயோகிக் கலாம். பசிப்பிணியை நீக்கத்தக்க மருந்து இஃதேயாம்.

“பிள்ளைகளையும் உதவியையும் என்னிடம் அனுப்புங்கள்; பத்து வருஷத்தில் இவர்கள் புதிய ஜாதியாராவர்” என்று தர்மபாலர் கூறு கின்றனர். இவரெண்ண முடியுமாறு பாஸ்டர் சீமாட்டி வருஷத்திற்கு ஆயிரத்தைந்நூறு ரூபாய் வீதம் முதல் ஏழு வருஷத்திற்கு உதவிசெ ய்ய முன் வந்திருக்கின்றனள். இந்த மாது ஹோனலூலு என்ற தீவி லுள்ளவள். இவள் முன் வந்துதவிசெய்தல் க்ஷேமக்குறியாம். மற் றத்தனவந்தர்களும் இவ்வாறுஉதவிபுரிவாராக. தர்மபாலர் வாசஸ்தல த்தின் விலாசம் கல்குத்தா, கிரீக்குரோ, இரண்டாம் நம்பர். இப்பெரி யோர் முயற்சி பெருகுக.

நாராயணசாமி ஐயர்.

## PREGNANCY:—சூல்.

கருத்தரிப்பதற்கு நாதாசயங்களில் சினை நல்ல ஸ்திதியிலிருக்கவேண்டும். அவற்றிற்குப் போகும் வழிகள் யாதொரு தடையில்லாமலிருக்கவேண்டும். ஆண்மக்களின் பீஜம் நல்ல நிலையிலிருந்து சுக்கிலத்தை யுண்டுபண்ணவேண்டும். காமப்பெருக்கினால் ஆண் பெண்பாலருக்கு இச்சையுண்டாகும்படி இரத்தந் தங்குகிறது. இது போதுமானதன்று. கருத்தரிப்பதற்குப் புணர்ச்சி இன்றியமையாதது. சுக்கிலமானது கர்ப்பாசயத்தில் பிரவேசித்து நாதக்குழல் வழியாய் நாதாசயத்திற் சென்று பிண்டத்திற்கு முதற்காரணமாகிய வஸ்து நிறைந்த சினைகளில் ஒன்றைபல்லது பலவற்றை எழுப்புகிறது. புணர்ச்சிக் காலத்தில் நாதநாளாக்கிர குஞ்சம் விரிந்துநாதாசயத்தைக் கௌவி அதிலிருந்து வெளியாகிப் பக்குவமாக கருவைப்பெற்றுக் கொள்ள ஆயத்தமாயிருக்கின்றது. கருக்கொண்ட சினை சினைப்பையினின்று வெளிப்பட்டு கருக்கொண்ட பக்கநாதக்குழலில் திறந்து வாயினுட் பிரவேசிக்கின்றது. அதன் வழியாகக் கரு மூன்று வாரத்துக்குள் கர்ப்பாசயத்துக்கு வந்து அங்கே மெல்ல மெல்லப் பூர்ணமான தன்மைக்கு வருகிறது. ஆனால் ஹோம் என்பவர் எட்டாம் நாள் கடைசியில் சினையைக் கர்ப்பாசயத்தில் கண்டதாய்ச் சொல்லியிருக்கிறார். இவ்வாறு கர்ப்பாசயத்தில் சேர்ந்த கருவே இனிப்பூர்ணமாகுஞ் சிசுவிற்கு முதற்காரணங்க ளமைந்தனவாயிருக்கின்றது. அமைந்த இக்காரணங்கள் அணுவளவாயும் விளக்கமாயும் உள்ளனவாதலால் அவைகளைக் காண்டலரிது.

கருக்கொண்டதனால் கர்ப்பாசய வுறுப்புக்கள் ஒவ்வொன்றும் பூரிக்கின்றது. கர்ப்பாசயமே அண்டவடிவாகி அதன் கழுத்துக் கீழிறங்கி யிருக்கும்.

கர்ப்பச்சின்னங்கள் பலவுள. சூதகம் நிற்றலொன்று. இதுமுதற் குறியாயினும் இதைமுற்றும் நம்பலாகாது. ஏனெனில் இது வியாதியினால் நிற்பதுமுண்டு. கர்ப்பங்கொண்டு சிலமாதம் வரைக்கும் சூதகம் வெளிக்காண்பது முண்டு.

கர்ப்பாசயத்துக்கும் மற்றத்தேக வுறுப்புக்களுக்கு முள்ள சம்பந்தத்தினால் கர்ப்பாசயத்தில் கருத்தரித்தவுடன் தேகம் அசௌக்கிய

மாகிறதும் மனது சஞ்சலப்படுகிறதும் கருக்கொண்டதற்கு ஓரடையாளமாகும். தேகத்தில் அசௌக்கியமுண்டானவுடன் ஸ்திரீக்கு நல்ல நித்திரையிராது. உடல் கனகனவென்றிருக்கும். வாய் குமட்டும், வாந்திவரும், அஜீரணமுண்டாகும், மனச்சந்தோஷமிராது.

கருப்பங்கொண்டபோது ஸ்தனங்கள் விம்மி அவைகளில் குத்துண்டாகும். அன்றியும் வெண்மையான வொருவித நீரும் வெளிக்காணும். சிலவேளை இக்குறிகள் கர்ப்பாசயம் நோய் கொண்டதனாலுமுண்டாகும்.

தலைப்பிள்ளையுண்டாயிருக்கும்பொழுது முலைக்காம்பின் வட்டங்கள் பருத்துக் கறுத்தநிறமுடைய வைகளாவதுசிறந்த குறியாம். இதையும் விஸ்தாரமான வநுபோகத்தின் பேரிலும் ஆலோசனையின் பேரிலும் நம்பவேண்டும்.

கர்ப்பத்தில் பிண்டமிருக்கிறதென்று தாய்க்கு முதலிற்றெரிவது பிண்டசலனத்தினாலேயே. கூபக* த்தின் வட்டவிளிம்பின் மேல் கர்ப்பாசயந்திடீரென எழும்புவதனாலும், கர்ப்பாசயம் அமுக்கிக்கொண்டிருந்த சந்து எலும்புகளின் இரத்த தசரங்கள் † விடுபடுவதனாலும் பிண்ட சலனமுண்டாகிறது. மேற்படி தசரங்கள் விடுபடுவதனாலே இரத்தமதிகரித்துத் தலைமூளை இரத்த தசரங்களுக்குச் சிறிது காலஞ் சோர்வுண்டாயிருக்கும். ஸ்திரீகள் ஸ்மரணை தப்பிப்போவது இதனாற்றான். ஸ்மரணை தப்புதல் கர்ப்பந்தரித்து நான்கு மாதத்திற்குமேல் இரண்டொரு வாரஞ்சென்று அல்லது பத்தொன்பது வாரத்திற்கு மேற்பட்டு வுண்டாகின்றது. அதுவே கர்ப்பந்தரித்தற்குச் சிறந்த சாட்சியாகும். சிலவேளை ஸ்திரீகள் குடலில் வாயு அசைதலைப் பிண்டசலனமாகக் கொண்டபோதிலும் வைத்தியன் மயங்கான்.

வயிறு பருத்தலைக் கர்ப்பக்குறியாக முற்றும் நம்பலாகாது. ஏனெனில் வயிற்றின்கணுள்ள வுறுப்புகள் நோய் கொள்வதனாலும் வயிற்றில் நீர் தங்குவதாலும் வயிறு பருத்தலுண்டு.

கர்ப்பந்தரித்து நாட் செல்லச்செல்ல கர்ப்பாசயம் வயிற்றிலேறுகிறது. மூன்றுமாதக்கடையில் கூபக வட்டவிளிம்பினருகே சுவர்கள் மெல்லிதாயிருக்குமிடத்தில் கர்ப்பாசயத்தைப் பரிசித்துக்

* Pelvis. † Vessels.

காணலாம். இது நான்கா மாதக்கடைசியில் கூபக வட்டவிளிம்புக்கு மேல் வருகின்றது. ஐந்தா மாதத்தில் கூபகமேல் வெளிக்கும் நாபிக்கு மத்தியிலிருக்கும். ஆறு மாதமதில் கர்ப்பாசயத்தின் அடிமோலோரம் நாபிக்குச் சற்றுக் கீழிருக்கும். ஏழா மாதத்தில் அதற்கு மேலாகயிருக்கும். எட்டா மாதத்தில் குலைவயிற்றுக்கும் நாபிக்குஞ் சமதூரமத்திய ஸ்தானத்திலிருக்கும். ஒன்பதா மாத முதலில் குலைவயிற்றில் வந்து பிரஸவமாக இரண்டொரு வாரத்திற்கு முன்னர் ஏழு அல்லது எட்டாமாதங்களிலிருந்த ஸ்தானத்திற்கு இறங்குகிறது.

ஊதல் சரீரமுள்ள பெண்களில் இந்த இறக்கந்தெரியாது. ஆகையால் கர்ப்பாசயத்தின் வாயுங்கழுத்தும் யோனியின் வழியாகப் பார்க்கில் அவைக ளின்ன நிலையிலிருக்கின்றன வென்று தெரிந்து கொள்ளலாம்.

கருக்கொண்டு நான்குமாதம்வரைக்கும் கர்ப்பாசயத்தின் வாயானது பிசின்தன்மையுள்ள அடைப்பினால் மூடப்பட்டிருக்கின்றது வாயின் பரிமாணஞ் சற்று அதிகரித்திருக்கும். அண்ட பேதத்தினின்று விருத்த ரூபமாகவுஞ் சற்று பின்னுக் குறைந்துமிருக்கும். கர்ப்பாசயத்தின் கழுத்தோ ஐந்தா மாதம் வரை நீளத்தில் மாறுபடாமலிருந்து அதன் பிறகு நீளத்திலரையங்குலம் குறையும். எட்டாமாத முடிவுக்குள் கழுத்தென்கிற ரூபமாறிப்போகிறது. கர்ப்பாசயத்தின் வாய் தனது சுற்றளவிலே முன்னிலுமதிகமாகி ஒன்பதா மாதத்தில் மிகவும் அகலுகின்றது.

கருத்தரித்ததென்று அநேக சின்னங்களைக் கொண்டு மாத்திரஞ் சொல்லலாமேயன்றி ஒரு குறியைக்கொண்டு சொல்லலாகாது.

தற்காலம் மருத்துவ சாஸ்திரிகள் இருநூற்றெழுபத்துமூன்று நாள், முப்பத்தோர் வாரம், அல்லது ஒன்பதுமாதத்திற் குள்ளாகவே ஒரு ஸ்திரீ பிரசவிப்பாள்; அதற்கு மேற்படா தென்று நினைத்த போதிலும் சிலவேளை கர்ப்பகாலத்தின் பரிமாணம் நாற்பத்தைந்து வாரம் வரைக்கும் செல்லுமென்பதற்கு அநேக அத்தாட்சிகளுண்டு.

அவ்வத்தாட்சிகளினின்று கொள்ளத்தக்க முடிவு யாதெனில், கருத்தரித்துப் பிண்டம் பூர்ணமாவதற்கு முப்பத்தைந்து வாரஞ்

செல்லுகின்றது. இதற்கு முன் இடையூறுகள் சம்பவிக்கலாம் வழக்கமான காலத்தைக் கடப்பதனாலே சிசு தன்னளவில் அதிகப்படாது. சிலவேளை சிசு ஒன்பது மாதமாக இரண்டு மூன்று வாரமிருக்கும்போதே வெளிவருவது முண்டு.

கருத்தரித்தகாலத்தைக் கடைசித்தலை முழுக்கான பதினான்காம் நாள் முதற்கொண்டாயிலும், பிண்ட சலன முதற்கொண்டாயினும், நீராடிய பின் முதற் புணர்ச்சிக்காலமுதற் கொண்டாயினும் கணக்கிட வேண்டும். முதற்குறித்த இரண்டு விதங்களைக் கணக்கு வைத்திருந்தால் பிரஸவமாக முப்பத்தொன்பது வாரமும், பிண்டசலனமுதற் கணக்குவைத்திருந்தால் பத்தொன்பது அல்லது இருபது வாரமும் ஆகும்.

சூலிகள் உணவு முதலானவற்றைச் சீராகப்பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படியாயின் தொந்தரவு நேரிடாது. சுலபமாய் ஜீரணிக்கத் தகுந்ததும் மிதமான பலத்தைத் தரத்தக்கதுமான வுணவைக் கொள்ளல் தகுதி. இலர்கிறி வஸ்துக்கள் கூடா. கிரமமாகவும் மிதமாகவும் உலாவவேண்டும். மிகுந்த சரீரப் பிரயாசை கூடாது. மனவெழுச்சிக்கு மிடங்கொடுக்கலாகாது.

வாய் குமட்டலும் வாந்தியும் நிமிர்ந்து படுத்திருந்து காலையில் எழும்போது தொந்தரை செய்யும்; பகலிலு முண்டாவதுண்டு. இவ்விரண்டும் முன்னர் கூறியபடி பிண்டசலனங் கண்டவுடனே நின்றுவிடும். சிலருக்குக் கர்ப்பகால முழுமையுமிருக்கும்.

கர்ப்பஸ்திரீகளுக்கு மலபந்தமாவது சாதாரணம். இது அதிகப் புளிப்பில்லாத கனிகளையும் மற்றுஞ் சில கந்தமூல பதார்த்தங்களையும் தின்பதனாலும் மிதமான தேகப் பிரயாசை யெடுப்பதனாலும் நீங்கிவிடும்.

கூபகத்தின் வட்டவிளிம்பு சாதாரண கூர்மையா யிருக்கிறதைப் பார்க்கிலும் அதிகமா யிருக்குமானால் அங்கே கருக்கொண்ட கர்ப்பாசயம் உறுத்துவதனால் அடிக்கடி கத்தரிக்கிறது போன்ற நோய் உண்டாகும்.

தொங்கின வயிற்றிற்கு மிருதுவான நீண்ட துண்டு வஸ்திரத்தைப்போட்டு வேறொரு துண்டினால் தோளோடு கட்டிக்கொண்டு நிமிர்ந்து படுத்திருந்தால் சுகமுண்டாகும். கருவழிவு காணுதலுமுண்டு.

தேகமுழுமையுங் காய்தல், இரத்தவுபரி, ஆசனக்குடல், நீர்ப்பை நோய் கொள்ளல், பலமான மனவெழுச்சி, ஆடல்பாடல் சவாரிசெய்தல் முதலியவற்றாலுண்டாகும் பெரும்பிரயாசை, வாந்தி, அளவுக்கு மிஞ்சிய வயிற்றோட்டம், சோர்வு, பனிநீர் * சீக்கிரத்தில் விருத்தியாதல், மேகரோகம் முதலியன கருவழிதற்குத்தூண்டு காரணங்களாம்.

"மானுடப் பிறப்பினுண் மாதா வுதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்து,
மொருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்து,
மிருமதி விளைவி னொருமையிற் பிழைத்து,
மும்மதி தன்னு ளம்மதம்பிழைத்து,
மீரிரு திங்களிற் பேரிருள் பிழைத்து,
மஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்து,
மாறு திங்களி னூறலர் பிழைத்து,
மேழு திங்களிற் றாழ்புவி பிழைத்து,
மெட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்து,
மொன்பதில் வருதரு துன்பமும் பிழைத்துந்,
தக்க தசமதிதாயொடு தான்படுந்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்.

(இன்னும் வரும்.)

ஜயராம் பிள்ளை.

---

## SIVAPERUMAN.

## சிவபெருமான்.

---

1. தக்கன்வதை:—தக்கன் சிவபெருமானை யொழிந்த மற்றத் தேவர்களை வைத்துக்கொண்டு யாகஞ்செய்தனன். இதை நாரத முனிவர் சிவபெருமானுக் கறிவிக்க, உமாதேவியார் தன் தந்தை செய்யும் யாகத்தைக் காணவிரும்பி விடைகேட்க, அவர் வேண்டாமென்று தடுத்தும் மீண்டுங் கணவனை வருந்திக் கேட்டமையால் சிவபிரான் போய் வருகவென்று விடைகொடுத்தனர். உமாதேவியார் விடைபெற்றுத் தந்தை யாகத்திற்குச்சென்றபோழ்து தக்கன் தே

---

* Liquoramnii

னையும் பிரானையும் அவமதித்து இழித்துக் கூறினமையால் தேவியார் சிற்றமுற்றுக் கைலையை யடைந்து நடந்தனவற்றை பிரானிடம் கூறினள். அன்றியும் யாகத்தை யழித்தலே தகுதி என்று தம்பெருமானை வேண்டலும், அங்ஙனமே பிரானும் நினைத்தனர். உடனே அவர் நெற்றியினின்று வீரபத்திரன் பிறந்தனன். வீரபத்திரன் யாகசாலையுட் சென்று சூரியன் பல்லையுடைத்தும் சந்திரனை நிலத்தில் தேய்த்தும இந்திரன் தோளை நெரித்தும் தக்கன் தலையை யறுத்தும் யாகத்தை நிர்மூலமாக வழித்தனன்.

2. பிறையணிதல்—தக்கனுடைய புத்திரிகள் இருபத்தேழு பேர். அசுவினி முதலிய இருபத்தேழு பெண்களையும் சந்திரன் மணம் புரிந்துகொண்டனன். ஆயினும் உரோகணியிடம் மிக்ககாதல் கொண்டனனாதலின், அவளுடனே சந்திரன் எக்காலமும் கூடிக் களித்திருந்தனன். இச்செய்தியை மற்றப் புத்திரிகள் தகப்பனிடம் அறிவித்தனர். சந்திரனை நோக்கி உன் கலைகள் குறைகவெனத் தக்கன்சபிக்க, சந்திரனுக்குப் பதினைந்து கலைகள் குறைந்தன. மீதமான கலையொன்றும் போய்விடுமென்று பயந்து சந்திரன் சிவபெருமானைச் சரணமடைந்தனன். பெருமான் இரங்கி ஒற்றைக்கலையோடுங் கூடிய சந்திரனைத் தமது சடாபாரத்திலணிந்து மீண்டுங் கலைகள் வளரும்படி அநுக்கிரகித்தனர்.

3. காளகண்டன்:—தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடைவிடாது போர்நடந்தது. அப்பொழுது இருதிறத்தாரும் தமக்கு மரணம் நேரிடாமலிருக்க அமிர்தபானஞ் செய்யவெண்ணினர். பிரமனை யடைந்து தங்களெண்ணத்தைத் தெரிவித்தனர். பிரமதேவர் சுரர்களுடன் சென்று திருமாலை வணங்கிப் பாற்கடல் கடைந்து அமிர்தந் தந்தருளும்படி வேண்டினர். திருமாலு மிசைந்தனர். கருடன் மந்தரமலையைக் கொண்டுவர அதைப் பாற்கடலில் மத்தாக நாட்டி அதற்கு வாசுகியைத் தாம்பாகப்பூட்டி ஒரு புறந் தேவர்களும் ஒரு புறம் அசுரர்களும் நின்றுகடையச் செய்தனர். அவ்வாறு கடைந்தபொழுது வாசுகி வருத்தம் பொறுமல் விஷத்தைக் கக்கியது. அவ்விஷம் கூடியிருந்த அனைவரையுங்கொல்ல வாரம்பித்தது. அனைவரும் சிவபிரானைச் சரண்புகுந்தனர். சரணடைந்தவரினிடுக்கணைக் களையும் பொருட்டு எம்பெருமான் விஷத்தையுண்டனர். அது அவர் கண்டத்தில் நின்றது. (காளம்=நஞ்சு)

4. உழுவைத்தோ லுடுத்தல்:—தாருகாவனத்தில் சிவபிரான் தம்மை மதியாத முனிவரின் மடந்தையாரைப் பிக்ஷாடன கோலமாய் வந்து கற்பழித்தனர். முனிவர்களுக்குக் கோபமுண்டது. சிவபெருமானைக் கொல்ல யாகஞ்செய்தனர். யாகத்தில் அரா, புலி, சூலம், மான், பூதம், துடி, நகுவெண்டலை, தீ இவை தோன்றின. இவற்றை முனிவர்கள் பெருமான்மேல் விடுக்க அவர் அவற்றின் வலியை யடக்கினர். அன்றியும் அவற்றின் தோலையும் உறுப்புக்களையும் அலங்காரப் பொருள்களாகத் தரித்தனர். (உழுவை=புலி)

5. பொற்சிலை குனித்தல்:—தாரகாசுரனுக்கு மூன்று புத்திரர்கள்; அன்னார் பெயர் வித்துயுன்மாலி, தரகாக்ஷன், சமலாக்ஷன்; இம்மூன்று அசுரர்களும் கொடுந்தவஞ் செய்தனர். அசுரத் தச்சனாகிய மயனென்பவனுதவி பெற்று சுவர்க்க மத்திய பாதாளமாகிய மூன்று உலகங்களிலும் அந்தரத்திற்சஞ்சரிக்கத்தக்க இரும்பு வெள்ளிபொன் இவற்றாலமைக்கப்பட்ட திரிபுரங்களையு முறையே பெற்றனர். இவர்கள் தம்மினத்தாராகிய பல வசுரர்களைத் திரட்டிக்கொண்டு அந்நகரங்களுடனே நினைத்த விடங்களுக்கு அந்தரத்தில் சென்றனர். அங்குள்ளாரைக் கொன்று திரிய் கொடுமைக்கஞ்சிய தேவர் முனிவர் சிவபிரானிட முறையிட்டனர். அதனைக் கேட்டு இரங்கிச் சந்திர சூரியர்களைச் சக்கரங்களாகவும், வேதாந்தங்களைக் குதிரைகளாகவும் பிரமனைச் சாரதியாகவும் அமைத்துப் பூமியாகிய இரதத்தின் மேலேறி மேருவை வில்லாக வளைத்து ஆதிசேஷனை நாராகவமைத்து வாயுவைச் சிறகாகவும் திருமாலைக் கூர்வாயாகவுங் கொண்டு அக்கினியாகிய அம்பைத்தொடுத்து எய்யமுயன்றனர். சந்திரன் முதலிய தேவர்கள் தந்தமாற்றலால் திரிபுரங்களழிகின்றன வென்று இறுமாப்புக் கொண்டனர். அதைப் பெருமானுணர்ந்து புன்னகை புரிந்தனர். அன்னகையால் திரிபுரவாசிகள் தமது முப்புரங்களோடு எரிந்து சாம்பராயினர்.

6. பதி இடப்பாகம் பெறுதல்:—பிருங்கி முனிவர் சிவ பெருமானை மாத்திரம் வலம் வந்தனர். அதைக்கண்ட தேவியார் நாயகனை நோக்கி, முனிவர் என்னை வலம் வராமைக்குக் காரணமென்னை என, சிவபெருமான் இஷ்டசித்திபெறவிரும்புவோர் உன்னையும் மோக்ஷத்தைப்பெற விரும்புவோர் என்னையும் வலம்வருவர் என்றனர். அஃது

ணர்த் தேவியார் பிரியாதிருக்கத் தவஞ் செய்தனர். தவவலியால் தேவி பெருமானுடைய இடப்பாகம் பெற்றனர்.

7. சடையிற் கங்கை:—சூரிய வமிசத்தரசர்களிலொருவனாகிய பகீரதன் கபிலமுனிவருடைய சாபத்தால் சாம்பலாய்ப் போன தமது மூதாதைகள் நற்கதியடையும் பொருட்டுத் தவஞ்செய்து சுவர்க்கத்திலிருந்து கங்கையைப் பூமிக்குக் கொண்டு வருகையில் அதன் வேகத்தைத் தடுப்பதற்காகச் சிவபெருமான் தமது சடையிலதை வைத்தருளினர்.

8 நமனுயிர்பெறல்:—மிருகண்ட முனிவர் புத்திரனில்லாமையால் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தனர். அப்பொழுது எம்பிரான் பிரசன்னமாகி, உனக்கு ஒரு புத்திரனுண்டாவான், அவன் பதினறுவயது மட்டு முயிர் பிழைத்திருப்பான், என்று வரங்கொடுத்தனர். அங்ஙனமே மார்க்கண்டேயர் ஜெனனமாயினர். பதினறு வயதளவு மிருந்தனர். சிவநேசமுதிர்ந்து சிவார்ச்சனை செய்துகொண்டிருந்த சமயத்தில் அவர்மேல் நமன்பாசம் வீசினன். சிவபிரானுக்குக் கோபம் பிறந்தது. அவனை உதைத்தனர். உடனே விழுந்து நமன் உயிர் நீங்கினன். பின்னர் பிரமன் முதலிய தேவர்கள் சிவபிரானைத் துதித்தனர். நமனுக் குயிரருளும்படி வேண்டினர். பிரானருளால் நமனுயிர் பெற்றெழுந்தான்.

9. கரிக்குன்றுரித்தல்:—கயமுகாசுரன் பிரமனை நோக்கித் தவஞ்செய்து சிவபிரானெழிந்த மற்றொருவராலும் அழியாவரம் பெற்று சாதுக்களை வருத்தி வந்தனன். இவனது கொடுமைக்கஞ்சிய முனிவர் காசியிற் சென்று சிவபிரானை அடைக்கலம் புகுந்தனர். அங்கும் கயமுகாசுரன் விடவில்லை. சிவபிரான் பிரளய காலவுருத்திர வுருவங் கொண்டு அவனை உதைத்துத் தள்ளிப் பிடரியைக்கீறித் தோலையுரித்துப் போர்வையாகக் கொண்டனர்.

10. வலைஞனுருவெடுத்தல்:—வைகைத்துறையைச் சார்ந்த கீழ்ச் சமுத்திரத்திற் கருகிலுள்ளத் தண்டுறைப் பாக்கத்தில் பரதவர்களுக்கெல்லாம் தலைவனும் சிவபெருமானுடைய திருவடிகளில் மெய்யன் பூண்டவனுமாகிய வலைஞனொருவன் நெடுநாள் மகப்பேறில்லாமல் வருந்து நாளில் ஒரு நாள் சுற்றத்தாரொடு மீன்பிடிக்கச்சென்றனன்.

அத்தருணம் கடற்கரையி னோர்புறத்து சர்வலோக நாயகியாகிய உமாதேவியார் ஒரு பெண்மகவாய்த் திருவுருக்கொண்டு ஒரு புன்னை மரநிழலில் அழுதுகொண்டிருந்தனள். பரதவர்கோன் அக்குழந்தையைக் கண்டு மதுரைப் பெருமானே மனமிரங்கி யளித்தனனென்று அடங்காப் பெருமகிழ்ச்சி கொண்டு தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றனன். ஆண்டு மகவை மனைவி கையிற் கொடுத்து வளர்த்து வந்தனன். பிராட்டி அவ்வாறு வளர்ந்து வருகையில் நந்தி தேவர் ஒரு சுறாமீனாகிக் கடலடைந்து கப்பல் முதலியனவற்றைச் சேதப்படுத்திப் பரதவருக்கு மிகுந்த விடையூறு செய்தனர். பரதவர்கோன் கிளைஞருடன் கடலிற் சென்று மீனைப் பலதரம் பிடிக்க முயன்றும் அகப்படவில்லை. விளைந்த தீங்கிற்குங் குறையில்லை. ஆதலால் பரதவன் இக்கொடிய மகரத்தைப் பிடிப்பவனெவனோ அவனே என் புதல்விக்கு மணாளனென்று பிரசித்தப்படுத்தியிருந்தனன். அப்போது சிவபெருமானொரு வலைஞனாகி தன்கணத்தவரில் ஒருவன் பரதவனைப் மீன்வலையைத் தோளிலிட்டு பின்தொடர்ந்துவரத் தண்டுறைப்பாக்கமடைந்து பரதவர்கோன் வேண்டுகோளால் சிவபெருமானாகிய வலைஞன் படவேறிச் சென்று வலைவீசியவுடனே அம்மகரம் வலையிற் சிக்கியது. அதுகண்ட வலைஞர்கள் யாவரும் சந்தோஷத்தால் ஆரவாரித்தனர். பரதவர் வேடம் பூண்ட சிவபெருமான் அதனைக்கொண்டு கரையிலிட்டனர். பரதவர்கோன் பெருமகிழ்ச்சி கொண்டு தன் புதல்வியை வலைஞர்பிரானுக்கு மணஞ் செய்வித்தனன்.

11. **தண்பாண்டி நாட்டான்.** உமாதேவியார்மதுராபுரியில் தடாதகைப்பிராட்டியாரெனத் திருவவதாரஞ் செய்து பாண்டி நாட்டையரசு புரிந்துவந்தனர். மணப்பருவம் வந்துற்றது. நாயகன் வாய்க்கவில்லையே யென்று தாயாகிய காஞ்சனமாலை நினைத்துக்கொண்டிருந்தனள். அதையறிந்து தடாதகைப் பிராட்டி, நினைத்த காரியம் நிறைவேறுங்காலம் வந்தால் முடியும், அதன் பொருட்டு மனநோவ வேண்டாம், உலகெங்குஞ் சென்று வெற்றியடைந்து மீண்டு வருவேன், என்று கூறிப் புறப்பட்டனள். முதலில் திக்குப் பாலகரை வென்று திறைபெற்றுப் பிராட்டியார் கைலை சென்றனள். தன் சேனைத்தலைவர்களின் ஆரவாரத்தைக் கேட்ட நந்திதேவர் போர் புரிந்தனர்; முதுகு காட்டினர்; நாணிச் சிவபெருமானுக் கறிவித்தனர்,

சிவபெருமானும் பெண் சிங்கம் போல வந்து நின்ற பிராட்டியரைக் கண்டனர். ஒருவரையொருவர் நோக்கினர். பிராட்டியின் ஸ்தன மொன்று மறைந்தது. நாணங்கொண்டனள். மண்கிளைத்து நின்ற னள். சுமதி என்னுமந்திரி, 'அன்னாய், இவரே நின் மணவாளன் என்று சொற்றனன். சிவபெருமானும் பிராட்டியை நோக்கி, 'பெண் ணே, நீதிக்கு விஜயஞ்செய்ய நினைத்து என்று புறப்பட்டனையோ அது முதல் நாம் நம்மதுரா நகரத்தை விட்டு நின்னை விடாது பின் பற்றி வந்தோம். நாம் சோமவாரத்தில் நின்னை மணஞ்செய்ய வரு வோம். நீ நின் னகருக்குப் போ' வென்று கட்டளையிட பிராட்டியும் மதுரா நகரம் வந்து சேர்ந்தனர். சொற்றவாறுத பிரானும் சோமவா ரம் வந்து தடாதகைப் பிராட்டியரை மணம்புரிந்து சோமசுந்தர பாண்டியன் என்னுந் திருநாமம் பூண்டு பாண்டிநாட்டிலரசு செலுத்தி வந்தனர்.

**12. திரு நடனம்.** சிவபெருமான் தேவர்களுக்காகக் கைலாயத் தில் நடனஞ்செய்தருளினர். அதற்குத் தெற்கே திருவாலங் காட் டில் காளிக்காகவும் நடனஞ்செய்தனர். இதற்கு ஊர்த்துவதாண்டவ மென்னும் பெயர். அதற்குந் தெற்கே சிதம்பரத்தில் பதஞ்சலி பக வானுக்கும் வியாக்கிரதபாத முனிவருக்கும் அருள்செய்யும் பொ ருட்டு ஓர் முறை நடனஞ்செய்தனர். தென்கோடியாகிய மதுரை யில் தடாதகைப்பிரராட்டியாரது திருக்கல்யாண மகோற்சவ தரி சனத்துக்கு வந்த முனிவர்களுக்காகவும் நடனஞ்செய்தருளினர்.

**13. பிரம கபாலங் கரத்தேந்தல்.** பிரமன் அகங்கரித்தனன். அதை யடக்கும் பொருட்டு சிவபெருமான் வைரவமூர்த்தியை யுண்டாக் கினர். அம்மூர்த்தியைக்கண்டு பிரமனுடைய நடுச்சிரம் நகைத்தது. வைரவர் அதனைக் கொய்து கரத்தேந்தினர்.

**14. அத்திக்கு வரமளித்தல்.** முன்னொரு காலத்தில் திருக்கைலா யத்தின்கண் சிவபெருமான் உமாதேவி யாருடன் தனித்திருக்கை யில் சிவ கணங்கட்குத் தலைவனாகிய அத்தி யென்பவன் இறைவ னைத் தரிசிக்கச் சென்றனன். வாயில் காப்பாளர் இறைவன் அந்தப் புரத்திலிருக்கின்றமையால் செல்லத்தகாது என்று தடுத்தனர். அவர் மொழியைத் தள்ளிச் சென்றவரை தேவியார் பார்த்துக் கோபித்த னர். அன்றியும், அத்தியென்னும் பெயருடைய நீ அத்தியாகக் கட

வை எனச்சபித்தனர். அவ்வாறு சாபமேற்ற கணநாதன் இறைவனை யுந் தேவியையும் வணங்கி அடியேன் செய்த பிழையைப் பொறுத் தருளவேண்டுமென்று துதித்தனர். இறைவன் 'நீ யானையாய்ப் பிறந்து தென் கைலாயமாகிய திருக்காளத்தியில் முத்திலிங்கத்தினை அருச்சித்துப் பிறப்பு நீங்கி முத்தியடைக' என்று வரமளித்தனர்.

15. சலந்தரனைக் கொன்றது. இந்திரன் சிவதரிசனஞ் செய்தற்காகத் தருக்குடையவனாய்க் கைலாயமலைக்குப் போனான். அதையறிந்த பரமசிவன் பூத வீரனைப்போன்று வடிவங்கொண்டெதிர் நின்றனர். இந்திரன் 'நீயார்' என்று கேட்கவும் பேசாமலிருந்தனன். அதனாற் கோபங்கொண்டு வச்சிராயுதமெறிய அது துகளாய்ப் போயிற்று. உடனே பரமசிவன் தன்னுருக்கொண்டு கோபத்தோடு நிற்க இந்திரன் நடுநடுங்கி இறைவனை வணங்கினன், குற்றத்தைப் பொறுத்தருளவேண்டுமென்று விண்ணப்பித்தனன். இறைவனிரங்கி அக்கோபத்தீயை மேற்கடலில் விடுப்ப அது சலந்தரனென்னுங் குழந்தையாயிற்று. வருணனால் வளர்க்கப்பெற்றுப் பருவமடைந்த காலத்தில் சலந்தரன் உலகமனைத்தையும் வெற்றிகொண்டு ஆந்தரமென்னு நகரினையுண்டாக்கி அதையாண்டு காலநேமிமகளான விருந்தையை விவாகஞ் செய்தனன். பின்னர் தேவர்கள் மேருவிற் சென்றிருந்ததை யறிந்து அவரோடு போர் செய்யப்போயினன். அவர்கள் திருமாலை வேண்டினர். திருமாலால் வெற்றிபெற முடியவில்லை. ஆதலால் எம்பெருமானிடமுறையிட்டனர். பரமசிவனுடன் போர்புரியச்சலந்தரன்புறப்பட்டனன். விருந்தைதடுத்தனள். கேட்டனனில்லை. கைலையணுகினன். சிவபெருமான் விருத்த வேதியனாக எதிர் வந்தனர். பூமியில் சக்கராகாரமான கோட்டைக் கிழித்தனர். இதற்குட்பட்ட நிலத்தைப் பேர்த்தெடு என்றனர். அவ்வாறு பேர்க்கையில் அந்நிலமே சக்கரமாய் அச்சலந்தரனைக்கொன்று சென்றது.

வாசுதேவ முதலியார்.

## CHINNATHAMBI.

## சின்னத்தம்பி.

(அத்தியாயம் 7-பாரபத்தியக்காரர்.)

கவுண்டர் காலையில் எழுந்தார், போசன முடித்தார். தமது வீட்டு வாசல் திண்ணைமீது விற்றுச் சிலர் அருகிருக்கத் தாம்பூலம் தரித்தார். சென்ற எட்டு ஒன்பது வருடகாலம் ஒரு கணப்போதும் பிரியாது உடன் உறைந்த தம்பியை ஊர்போக்கித் தனித்திருப்பதில் விசனம் பாராட்டினர். என்றாலும் தம்பி சுகமே ஊர் அடைந்து அத்தையார் அடிபரவி அழைத்துவரக் கடவுளர் அனுக்கிரகம் புரிய வேண்டுவார். இவ்வாறிருக்கும்போது ஒருவர் வந்து உட்கார்ந்தார். உடனே கவுண்டர் அவரைப்பார்த்து "சிதம்பரம் பிள்ளையவர்களே! வாருங்கள், எங்கே அதிக நாளாகக்காணேம். ஊரில் நீங்கள் இல்லையெனக் கேட்டேன். உங்களைப் பாராமல் என் கண்ணிரண்டும் பூத்துப்போயின" என்றார்— "கவுண்டரே நான் அநேக ஊர்களுக்குப் போயிருந்தேன். நேற்றிரவு வந்தேன். எனக்கு முங்களைப் பாராததில் அதிக விசனமுண்டு" என்றனர். இதற்குக் கவுண்டர்,

"ஐயா! நம்மூர்க்கு ஒரு சிறுவர் வந்திருக்கும் செய்தி நீங்கள் அறிவீர் அன்றே. அவர் படிப்பாளி, சாதுரியப் பிரசங்கி, இலக்கிய இலக்கணவித்துவான்" என்றதற்குப்பிள்ளை "ஆமாம் நான் அவரை அறிவேன். ஆனல் நெருங்கிப் பேசியது கிடையாது." என்றார். இதைச் செவியேற்ற கவுண்டர் "பிள்ளையே! அவரைவிட உத்தமர் இவ்வுலகில் யார் இருக்கிறார்கள்? அவரது வயது மட்டும் சிறியதே தவிர நடத்தையோ சர்வ சிலாக்கியமானது, அவர் குணாதிசயங்களை எப்படிச் சொல்லுவேன்? நான் சென்ற ஒன்பது வருஷகாலம் பிரியாது பழகுவதில் நாளுக்கு நாள் அதிகம் அவரை அறிகிறேன்" என்றனர். இச்சொற்களைக் கேட்டதும் பிள்ளை நகைத்துக் "கவுண்டரே! என்ன தடை, அவரது ஒரே குணம் எனக்கு அவரது உத்தம குணத்தை விளக்கிற்று. வந்த நாள் முதல் அவரெங்கே போகிறார்? எடுங்கையுமாய் இருப்பதேயன்றி எறிட்டு எதை

யும் பார்ப்பதில்லை. இவ்விதமாக மனிதர் இருப்பது துர்லபம் என்ற பிள்ளைக்கு விடையாகக் கவுண்டர் "பிள்ளையே! இவர் படிப்பு என்ன? ஓ! ஓ! ஒரு பெரிய சமுத்திரம். என்னென்ன படித்திருக்கிறார். நாம் கேட்டிராத புத்தகங்களை எல்லாம் ஐயந்திரிபறக்கற்றுத் தெரிந்திருக்கிறார். இதுமட்டுமல்ல, கற்றபடி நிற்கவும் அறிந்தவர். நாம் கேட்பதை எல்லாம் ஆதாரத்துடன் சொல்லிக் களிக்க வைக்கும் சமர்த்தர். எத்தனை புராணங்கள்—எத்தனை காவியங்கள்—எத்தனை இலக்கணங்கள்—எத்தனை கோவைகள்—கூறிப் பிரசங்கிக்கிறார். நரை திரை மூப்படைந்த இக்காலத்தில் இவரது நட்பு நான் அடைந்தது ஒரு பெரும் பாக்கியம்" என்றதைச் செவியேற்றபிள்ளை "ஐயா! கவுண்டரே, இவருக்கு எந்த ஊர்? இங்கு ஏன் வந்தார்.? அவர் குலம் கோத்திரம் என்ன? என்ன திருமேனி உங்களுக்கு அறியச் சொன்னாரா? நல்ல மாடானது என் சொந்த ஊரை விட்டு வரவேண்டும்?" என்றனர். இதைக்கேள்வியுற்ற கவுண்டருக்கு ஓர் பெருஞ் சிரிப்புண்டாயிற்று. உடல் குலுங்கச் சிரித்தார். "ஐயா! பிள்ளையவர்களே! மாட்டைத் தவிர—அதனிலும் நல்ல மாட்டைத் தவிர வேறே எது கன்றுக்குட்டிகளாகிய நம்மவர்களுக்கு நாற்கவியென்னும் முலைகளால் தமிழ்த்தீம் பாலைச் செவிப்புலன் வழியாக ஊட்டக்கொடுத்து ரக்ஷிக்கும்? கற்றோர் நட்புக்கொண்டல்லவா நாம் உய்யவேண்டும்.? அவர்களைக் காண்பதும், அன்னோருடன் அளவளாவிப்பேசுவதும், அவர்கள் சீர் உரைப்பதுவும், அவர்களோடு இருப்பதுவும் நன்றேயன்றோ? இவர் திருத்தவத்துறை என்னுங் கொற்றமங்கலத்தார். அது ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனாரால் தரிசிக்கப்பெற்றுப் பாடல் அடைந்ததலம்" எனக்கூறி விருத்தாந்தம் அனைத்தையும் ஓதியருளினர். பிள்ளைகேட்டார். மௌனஞ் சாதித்தார். தலைபதைத்தார். மனநைந்தார். "சுற்றத்தார்கள் இவ்வாறான கொடுமையும் செய்வார்களோ! ஓ பகவானே! நாம் இதுவரை கேட்டிராத வழிகளில் பாலகன் இம்சைப்பட்டிருக்கிறான். இவர் உயர்ந்தவர் அன்றோ? கவுண்டரே! அவர் இருக்கவேண்டிய இடங்களில் இராமல் மூடர்பால் இருப்பாரோ? யானைக்குத் தன் கொம்பு விசேடம் தெரியுமா? அவ்வாறே பாம்பும், மானும், கவரியும் முறையே தம்மிடமுள்ள மாணிக்கம், மான்மதம், மயிர்ப் பெருமைகளையறியா; அதுபோல் சுற்றத்தார்கள் இவரது பெருமையையறிந்திலர்,

"தரை யதினிலோடு தேர் நீர்க்கடலிலோடுமோ? சலதிமிசை யோடு கப்பல் தரை மீதிலோடுமோ?" ஓடாவல்லவா. அதுபோல் சிட்டர்கள் வாழும் இடத்தில் உயர்வாக வீற்றிருக்கும் தன்மையவர் துட்டர் குழுவிற்கூடி வாழ்வாரா? அத்தையம்மாளும் நல்லாலோசனை செய்து அனுப்பினள்" என்று சொன்னார். இவைபவரது குல கோத்திரங்களை அறிந்து "கவுண்டரே! கார்காத்த வேளாண் மரபினரா? இதுவரை அறியாதிருந்தேன். என்ன பாவம் செய்தேன்! நான் பிழைத்தது வீண். என் இனத்தாரை—என் மரபுதித்த சிறந்தோரைப் "பார்ப்பாரப் பொட்டிமக்கள் வாசல் வழி" யடைந்து ஒன்றிரண்டாக வெந்தசோற்றை யருந்திக் காலம் கழிக்கவைத்தேனே! இப்பாவத்தை நான் எப்படித்தொலைப்பேன். கங்கை யமுனை சங்கமத்தில் மூழ்கிக் காசி விஸ்வலிங்கேசரைத்தரிசித்துத் திரும்பிச் சேதுவடைந்து சேவித்தாலும் என்பாவம் தொலையாதே. ஆதலால் பெரியோர்க்கு இழைத்த இடரை அப்பெரியோரைக்கொண்டே தொலைக்கவேண்டும். நாமோ சிறியவர்கள். அவரோ பெரியவர். ஆதலால் "சிறியவரானவர் தமக்குரியவோ வல்லவே, தீமைநன்னூ—லறிஞரானவர் தமக்கல்லவோ பொறை". ஆதலால் அவர்க்ஷமிக்க வேண்டும். கவுண்டரே! இதுவரை நான் அறியாமல் வீணே காலத்தைக் கழித்தேன். இனிமேல் அவர் அத்தையம்மாளுடன் வரும் வரை நான் அழைத்துப்போய் மகேசுர பூசை செய்வேன். எனக்கடுத்த கோத்திரத்தார் இங்கு வந்தவரைச் சொந்தம் செய்யாது விடலாமா? நாலைந்து நாளைக்கு முந்தி மருதகிரிக்குமரர் தரிசனம் செய்து வந்தவன், இவரை அடிவாரச்சோலையிற் கண்டேன். என்னுடன் வீட்டுக்காரியும் மகளும் வந்திருந்தார்கள். மூவரும் இவரைப் பார்த்தோம். அங்கே இவரும் எங்களை உற்றுப்பார்த்தார்; ஆனால் நட்பாடவில்லை" எனப் பற்பலவாறு கூறி மன நொந்தனர். இதைக்கேட்ட கவுண்டர் "ஐயா! நீங்கள் பாரபத்தியக்காரர்; அவரோ அரசவைச் சிறப்புற்று மேம்பாடாக வாழ்பவர். சுகமே சகலத்தோடும் இருக்கின்றார். பணத்திற்கென்ன? அந்தஸ்துக்கென்ன? இரண்டும் தழுவுறப்பெற்றவர். நீங்கள் தென்னமராய கோத்திரத்தராயிருக்கிறீர்கள். ஆதலால் அச்சைவக் கொழுந்தை—சின்னத்தம்பி என்னும் பெயர் பூண்டவரைத் தமது குலக்கொடியாகிய சின்னப் பிள்ளையால் தளைந்து காளப்பட்டியில் அடைத்துவைப்பீராக,

சின்னப்பிள்ளையும் தக்க பருவம் அடைந்தவள். அவளை இன்றைக்குக் காலை சந்தித்தேன். அவள் மடமாது. அவளது மேனியழகு—நடையழகு—பெண்பாலார்க்குப் பொருந்திய குணங்களான நாண் மடமச்சமாதியவை பூத்தொளிரு மேன்மையழகு—அறிவு தீக்ஷண்ணியம் இவைகளுக்கேற்ற பர்த்தா இவரே யாகும். இவரை இங்கே வைத்து வாழலாம். இனி எங்கும் போகார். அவரது சாதகமும் இருக்கின்றது. சோதிக்கலாம்.” என்று எடுத்துக் கொடுத்ததை இருவரும் சோதித்து பொருத்தமிருப்பதைக் கண்டு களித்தார்கள். ஆனால் மற்ற விஷயங்களை யெல்லாம் அவர் வந்த பின் தெரியலாம். அவரது வீட்டு வழக்கத்தையும், கலியாணச் சடங்குகளையும், நடையுடை பாவனைகளையும், நான் நேரில் அறிந்து பிறகு சொல்லுகிறேன். ஒரு விஷயம் நான் இனிச் செய்யப்போகிறேன். அத்தைபம்மாள் வருகிறவரை அழைத்துப்போய் என் வீட்டில் இருத்தி மயேசுர பூசை செய்து பிரியாதுறை தருவேன். இது செய்யத்தவறினல் எனக்குப் பாரிபத்தியக்காரன் என்னும் பெயர் எதற்கு? கணக்கில்லாத ஏவலாளரும், ஐந்தாறு கணக்கர்களும், ஐந்நூறு குடித்தலைமையும் எனக்குண்டு. இருந்தும் வந்த சைவர்க்கு பூசைபுரியாமல் வாளாவிருந்தேனே! இவ்விளைய வயதுடைய மூதறிஞர் அந்தணர் வீட்டடிசில் அருந்தி நலம் புலம் அற்றது அதிகநேர்த்தியாய் இருக்கிறது! சரி, காலமோபோய்விட்டது. நான் போகிறேன். கவுண்டரே! சின்னத்தம்பி இன்னும் எத்தனை நாளில் வருவார்” என்று வினவியதற்குப் பதிலாகக் கவுண்டர் இரண்டு வாரத்தில்வருவார் என்றும், சகல முஸ்தீப்புகளுடனும் சரிவரப்போயிருப்பதாயும், அடுத்த மாதமுதலில் பணவசூல் செய்யவேண்டுமென்றும், அதனல் அவர்போனவிடத்தில் அதிக நாள் தாமதிக்கார் என்றும் விடையளித்தார். இதைக்கேட்ட சிதம்பரம் பிள்ளை விடைபெற்று வீட்டுக்கேகினர். கூடி இருந்தவர்களுடன் கவுண்டர் குலவிப்பேசிக் காலத்தைக் கழித்தார். சூரியன் அத்தமித்தான்.

K. C. துரைஸாமி.

# VEDANTA DESIKA.

## வேதாந்ததேசிகன் வைபவம்.

(141-ம் பக்கத் தொடர்ச்சி.)

நாடோறுந் திருநாரணனைத்தொழுதுவரும் வாக்கி யொருபகல்குடும்ப ஸஹிதராய் மூலோத்ஸவ பேரமா வெழுந்தருளி யிருந்த உடயவரை யஞ்ச லித்துழி, பேருளங்களித்த அவ்வுடையவர் ஓர் அர்ச்சகமுகத்தாற் பிள்ளையை விளித்து, 'நமக்குப்பின் நுந்தனையரானஇவ்வரதாரியர் நஞ்சித்தாந்தத்தைப் பிரவசனம் புரிவ' ரென்றறைந்து ஸகல மரியாதைகளையுமீந்து விடையருள பிள்ளை யங்ஙனமே யவைகளைத் தங் கரமதாக்கிக்கொண்டு அன்னாரது பாத கமலங்கட்கே தொண்டுசெய்வாராயினர்.

இன்னணம் நிகழுங்கால், வர்தாரியர் ஒருநாள் பகவத்விடயமான ஆறு யிரப்படியை தம்மத்தனுர் புனைந்துள்ள தெள்ளுரையொடு சேர்த்து அதிக ரித்துக் கற்பானிருக்கப், பிரம்மதந்திர ஸ்வதந்திர ஜீயராவார்மட்டும்அங்ஙன மாக்காது வாளாவிருந்தனர். கண்ட வேங்கடநாதாரியர் அஸந்துஷ்டராய் ஜீயரை 'நோக்கி நம் வரதாரியனைப்போன்று நீவிரும் அன்னதை வழுத்தலா காதோ' வென்ன, ஜீயர்: வர்தாரியரிடத்து உடையவர் மிக்ககடாக்ஷம்புரிந்தி ருப்பதால் ஆயவரிடத்து ஸமானப்பிரபத்தி யியற்றாமல் ஆசிரியப்பிரபத்தி வரிக்கவேண்டுமென்று அபிஸந்திசெய்த வடியேனுக்கு, ஆவசியகமான பக வத்விடயத்தை யன்னாரிடத்தேயே அதிகரிக்குமாறு (வெண்ணெய்க்கூத்தஜீ யராதியோர் மனமுவக்க) நியமித்தருளல் வேண்டுமென்று'இரக்கப், பிள்ளை: 'அங்ஙனே யாகுக'வெனக்கிளத்தி ஸூனுவை, விளித்து'ஜீயராதியோர்க்குப் பகவத்விடயத்தை காலக்ஷேபமுகத்தான் போதி' எனக் கட்டளையிட்டனர். ஆங்கவரு மங்ஙனமே நிகழ்த்துங்கால் ஜீயர்: శ్రీమల్లక్ష్మణ యోగీంద్ర సిద్ధాంత విజయధ్వజం। విశ్వామిత్రకులోద్భూతం వరదార్యమహం భజే எனத் தம்மாசிரியரா விளங்கும் வரதாரியர் விடயமாய் ஒரு தனியனை யனுஸந்தித்துப் பின்னர், శ్రీమాన్వేంకటనాథార్యః కవితార్కికకేసరీ। వేదాంతాచార్యవర్యో మే సన్నిధత్తాం సదా హృది என்ற தனியனையு மனுஸந்தித்து, உடையவரதும் அப்புள்ளாரதுமான பரி பூரணகடாக்ஷத்துக்குப் பாத்திரராயிருந்துள்ள நிகமாந்ததேசிகன் விடயமாக రామానుజదయాపాత్రం జ్ఞానవైరాగ్యభూషణం। శ్రీమద్వేంకటనాథార్యం వందే వేదాంతదేశికం என்றொரு தனியனையும் விண்ணப்பித் தனுசந்தித்துப் பின்புள்ள குரு பரம்பரானு ஸந்தானஞ்செய்து பகவத்விடயத்தை வாயார வழுத்தி வந்தனர். இவ்விருத்தாந்தத்தை முதலிகள்வாக்கியினிடத் தறைந்திட,கேட்ட வேதாந்த கேஸரி 'நன்று' என மகிழ்பூத்தனர்.முதலிகள்: 'ஆயின் எதையனுஸந்திப்பது' என, வாக்கி: 'முன்னது ஸூதர்சனபட்டர் விரும்பியதாகலான் ஸ்ரீ பாஷ்

யாதி கீர்வாணக்கிரந்தங்களைப் படனஞ் செய்வுழியும், பின்னது ஆசிரியர் நாமாவளிகளின் ஸ்தௌத்தியத்தை யுடையதாகலான் பகவத்விடயமான த்ரமிடகிரந்தங்களைக் கற்புழியு மனுஸந்திக்கவுரியது' என ஏற்றவண்ணம் விபாகித்துப் பலருமொப்ப ஆணைதந்தனர். ஆசிரியராஜ்ஞையைக் கடவா தாரு மங்ஙனே உஞற்றிவந்தனர்.——ஒருநாள்வேளையில், உலகாசிரியரா முடையவரை முன்னிட்டு யதுகிரிநாச்சியார் திருநாரணன் செல்வப்பிள்ளையாதிய வேனையோரை யடிபணிந்தவாக்கி, ஆங்கவரை సవనవబహులభోగాంనాథ నారాయణశ్రీం என்றசுலோகத்தான் மங்களாசாஸனம் புரிந்து விடையேற்றுப் பண்டுபோல் தம் விடுதியிலமர்ந்து உறையுங்காலத்து,

> 'திருவரங்கப் பெருநகருட் டெண்ணீர் பொன்னித்
> திரைக்கையா லடிவருடப் பள்ளி கொள்ளுங்
> கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டேன்
> கண்ணிணைக ளென்றுகொலோ காணுநாளே'

என்றவணம் பிறிவாற்ருமையால் **அபீதிஸ்தவ**த்தை யருளிச்செய்து அன்னதால் 'நின்பாதஸேவைக் கின்னமும் இலக்காகா திருத்தல் நேரிதோ' வென்று அழகியமணவாளன்மாட்டுப் பொறையிரத்தலும், பெருமான் அற்றைக் கங்குலில்வாக்கியினது கனவில் தம்பாலடைந்து வாழுமாறியம்பிக் கரந்தனர். (அப்பொழுதோ பெருமான் ருனுறை கோயிலை நீத்துள்ளாராகலான் வாக்கிக் கறைந்த வாணைக்கியைய யியற்றுவா னுன்னினர்போன்று நிகழாநின்றது):— அவ்வளவில் **கோபண்ணராய**ரென்பார் திருமலையினின்றும் அழகிய மணவாளனை எழுந்தருளக் கொடுபோய்ச் செஞ்சியிலே **சிங்கபுர**த்தில் சின்னுளாராதித்து அரங்கநகரைப்புக்குத் துருக்கரைவென்று அன்னபிரானை நாச்சியாரோடே பெரியபெருமானது திருவோலக்கத்தில் ஒரு சேர்த்தியிலிருத்தி நித்யோத்ஸவாதிகளை யணிபெறவாற்றிவந்தனர். அழகிய மணவாளனோ కృతకృత్య స్తదారామోవిజ్వరః என்னவாங்கு பெரிது மகிழ்பூத்தாராய்த் தாங்கோபண்ணராயரால் துருக்கரை வெல்வித்து நித்யோத்ஸவராயிருப்பதைப் பின்னருந் தேசிகமணியின் கனவின்மூலமா யியம்பி யவரைத்தம்பாலடையுமாறு வாஜ்ஞாபித்தனர். பிள்ளை தக்கணமே துயினீத்து அமுதுண்டவன்போ லானந்தமெய்தி ஸகுடும்பராய் முதலிகளுடன் ஸத்யமங்கலத்திற் பெருமானைத் தொழுது விடையேற்று "కదాపశ్య మహేంద్రం గతః శోకనాశనం" என்னவாங்கே பேரவாவால் நகருளாரெதிர்கொளக் கொயிலெய்தி யெம்பிரான்களைவணங்கி 'కృశేపి తేయదివిరహోదుస్సహః என்ற விதேயனை இன்னுளளவும் பிரித்தீர்களே, என்ன, பெருமான்: శోకస్తేవిహతః సర్వః కల్యాణంత్వాముపస్థితః" என்றவணமே 'உமக்கினி யொருகுறையுமில்லை' யென்றறைந்தருளிகளிக்கக் கணக்கில் வரிசைகளை யீந்தருளினர். பிள்ளை யன்னவற்றையேற்று

ஸூவவாவர்ஏ-லீவக்ஷ்ம்' என்ன மங்களாசாஸனபூர்வகமாய் ஏதவஹிதஸபர்யாம் என்ற சுலோகத்தை விண்ணப்பித்து, நாளு நன்மையேபுரிந்து வருங் கோபண்ணராயரிடத்தில் கிருதஜ்ஞதையால் ஆலீயுலீல என்ற சுலோகத்தினையு மருளிச்செய்து பூர்வம்போன்று வித்தாந்தியாயிருந்தனர்.—அங்ஙனுங்கால் ஒருவைணவதாசி சித்திரகூடத் திருந்து வந்துஒருவர்மூலமாய்,--'இப்போழ்து தில்லையம்பதியார் பரஸ்பரம் பற்றலராயிருக்கையால் இரஜாவலம்பன முண்டாகில் பகவத்பிரதிஷ்டையை யாண்டே இயற்றலா' மென்றறிவிக்கத் தேசிகரன்னதைக் கோபண்ணராயருக் குணர்த்தி யன்னவரால் சித்திரகூடத்தில் நம்பெருமான் கோவிந்தராஜனை 'திறல்விளங்கு மாருதியோ டமர்ந்தான் றன்னை' என்றபடி பெரிய சிறிய திருவடிகளான கலுழன் மாருதியாதிய பரிவாரங்களோடுஆலயத்தமர்த்திப்பிரதிட்டைசெய்துமங்களாசாஸனித்து இராயருக்கு விடையீந்து, கச்சியம்பதியிற் றம் முறையிலம் புக்கு வாழ்ந்தனர்.

உறைந்துழி, திருமலை ஸ்ரீநிவாஸாசாரியரென்பார் வாக்கியையடைந்து அவரது பாதப்போதுகளி லாச்ரயித்து விசேடார்த்தங்களைக் கேட்டு வந்தனர். நிற்க,—வறுமைவாய்ந்தும் விவாகத்திலுக்கு விழைந்த பிரம்மசாரியொருவர் ஒரு நாள் பல்லோரிடத்தும் மணத்தினுக்குரிய செலவிற்காக வேண்டிய தனங்களையிரக்கக், கண்டகொடியர் பலர் நிர்ப்பந்தித்து நந்தேசிகமணிபாற் சென்றிரக்குமாறு ஏவினர். அங்ஙனே நிஷ்க்கபடியும், பிள்ளையின் பேரரிய நிலையை யுணராதவருமான பிரம்மசாரி வாக்கியையண்மி யஞ்சலித்துத் தன் வரவுணர்த்தி நின்றனர். கடிகையில் அடைந்தவர் செயலை முற்றுமோர்ந்து புன்னகை யெய்திய நிகமாந்தாரியர் அன்னவரை நம்மன்னையாம் பெருந்தேவித்தாயார்பா லழைத்தேகி யாங்கவர்க் கவரைக்காட்டி யோயா வணக்கம் புரிதரச்சாற்றித் தாம் ஸ்ரீஸ்துதியை யனுஸந்தித்து வேண்ட, அங்ஙனே ஜகன்மாதாவினருளால் பிரம்மசாரி தாம் விரும்பியாங்கு தனங்குவியலாவிழ வன்னதை ("எடுத்துக்கொடுபோமின்" எனச்சொல்லிய தேசிகர் வாய்மொழிக் கிணங்கிப்) பேருவப்பொடு வியந்து கொண்டாடி யேற்றாராய் வாக்கியை வணங்கி விடைபெற்றுச் சென்றனர். ஆண்டதைக்கண்ட (ஏவிய) கொடியராதியோர் அதிசயித்து அகந்தையை நீத்து தேசிகர் வைபவத்திலீடுபட்டுப் பொறையிரந்து பெரிதுஞ் சாந்தராயினர். வாக்கியை வழுத்தாதார் யாரே? வாளா வெள்கி நின்றவர் பலரே! இம்மட்டேயோ ஒழிந்திலர்.

ஒருநாள் நம்மழகிய மணவாளனுக்குத் திருவத்யயனோத்ஸவம் வந்தவாறே சில குமதிகள், ஆண்டுள வதிகாரியைச் சில குயுக்திகளானும் பூர்வபக்ஷமொழிகளானும் மயக்குவித்து "இப்போழ்து திவ்ய ப்ரபந்த மோதுதன் முதலான ஸ்வவித்தாந்த காரியங்களை ஸ்ரீவைணவர்கள் பிரமாணங்களைக் கொண்டு நிர்வகிப்பரேல் திருவத்யயனோத்ஸவம் நடப்பிக்கத்தகும். இன்றேல், தேவாலயங்களில் ப்ரபந்தானுஸந்தானமும், ஆழ்வாராதியர்பூசனைபுரிவதுமாகியயாதுமொண்ணு"தென நிர்ப்பந்திக்குமாறுவேண்ட, இணங்கியவதி

காரியங்களே விழைத்தனன். அவ்வமயத் தாலயத்தாரனைவரும் ஏனைய பெரியோர்களும் வேங்கடநாதாரியரைக் கிட்டி செப்பன்மேயினர்:—“ஆன்றோய் ஸ்ரீராமாநுஜமதஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமரான தாம் இவணிருக்கும்போழ்தே நம்பிரா னுத்ஸவத்தினுக் கிடையூறெய்த றகுமோ? அங்ஙனமொண்ணுததற்கேது மறுப்போ வன்னதைக் கணத்துளியற்றி யடியோங்களை யாண்டருள்வீ” ரெனப் பல்வேறு முறையிட்டனர். அனைத்தையுஞ் செவி மடுத்த பிள்ளை யுள்ளம் வெதும்பி ‘அங்ஙனு’ வென்று முதலிகளோடு சினகர மெய்தி மண்டபத்திருந்து முன்னங்கூறிய குமதிகளை யதிகாரிகளோடழைத்து வாதிக்கத் துவக்கினர். அப்போழ்தக் குமதிகள் கொடிதான க்ஷுத்ரமந்திரத்தினல் வாக்கி மௌனியாயிருக்குமாறு புரிவிக்க, பிள்ளை யதை யோர்ந்து மானஸீகமாக மந்திரத்தை ஸ்மரித்து த்வயத்தை யனுஸந்தித்து శ్రీమతే రామానుజాయ నమః என்றியம்பி க்ஷணத்துள் க்ஷுத்ரத்தை நிக்ரஹித்து வாதிடலாயினர். ஆயகாலத்தம் மந்திரப் பிரயோகமானது (முன்னம் பிரஹ்லாதாழ்வான் விடயத்தில் கொடியனுந் தந்தையுமான ஹிரண்யனிழைத்த க்ஷுத்ரமந்திர ப்ரயோகத்தைமான புரிந்தார்களையே வருத்த, பொறுத றகுளர் பெரிதுமாழ்கி தேசிகர் திருவடிநிலைகளில் (முன்னம் இரகுவீரனைக் காகாசுரன் போன்று) வீழ்ந்து ப்ராணபிரதிட்டை யிரந்தனர். உடனேவாக்கி రఘూణామపివత్సలః என்பதை யுள்ளித் தம்மைச்சரணடைந்தார்க்கு க்ஷுத்ர விமோசனமாக்கி யாங்கவரை வாதத்தாலே நிராகரித்து அதிகாரிகளோடவர்களையுந் தமக்காப்படுத்திக்கொண்டு, முறையே யுத்ஸவமுனுற்ற வுரைத்தருளி யன்னவதிகாரிகளின் ஆஜ்ஞாபூர்வகமான நியமனத்துக்குப் பிரவித்தபத்திரமும் கல்வெட்டுமுண்டாக்கி, திருவத்யயனோத்ஸவத்தை நிகழ்த்தி முடிப்பித்தனர். பின்னர் ஸகல வேதாந்தஸாரமான வியாஸ ஸூத்ரத்துக்கும், நாலாயிரப்பிரபந்தங்களுக்கும் முக்கிய பிரமாணமான திருமந்திரத்தில் பிரதிபாதிக்கிற விசேடார்த்தங்களையெல்லாம் முப்பானிரண்டதிகாரங்களால் யாரும் தெள்ளி,திலுணர்ந்துய்யுமாறு **திருமந்திரார்த்த** மென்னும் **ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரத்தை** யருளிச்செய்து అంగీకృత్యసతాం ప్రసక్తిమసతాం మేధావినిర్వాపితః என்று தலைக்கட்டி, **ஸாரதீபம்**, **விரோதபரிஹாரம்** என்ற இருநூல்களையுமியற்றினர்.

ஒரு நாள் திருவோலக்கத்தில் வாக்கி பிரபந்தானுஸந்தானம் செய்து கொண்டிருந்த எல்வையில், பேராபத்திற்சிக்கி நீங்கின வருளிச்செயல்களில் ஆதராதிசயத்தால் பிரம்மதந்திரஸ்வதந்திர ஜீயர் పూర్వం తత్ర కాలనాథ ఝటీరాటాచార్య என்றருளிச்செயக், கண்ட வெண்ணெய்க்கூத்தஜீய ரங்ஙனே தாமுமொரு சுலோகஞ் சொற்றனர். ஆண்டிருந்த சான்றோர் அச்சுலோகங்களின் உண்மைகளையாய்ந்தவ ராகலான் பிள்ளையை யாதரம்பெருகப் போற்றி, “பேணிய பேராருயிரே! தாம் பண்டு இச்சித்தாந்தத்தை வாதத்தா

னும் அரிய பன்னூல்களானும் நிலைபெறச்செய்து, அடைந்த அவத்யங்களை யாற்றினீரே, அன்னவைகளையாவு மொரு துலைத்தட்டிலும், இப்போழ்து நிகழ்த்திய திருவத்யயனோத்ஸவ இடையூற்றை யாற்றப் புரிந்த காரணத்தாலாக்கிய திவ்யப்ரபந்த ப்ரமாண முதலானவைகளை மற்றொரு தட்டகத்தும் இட்டுச் சீர்தூக்கிப் பார்க்கின் அன்னபலவும் இன்னசிலவும் ஒற்றுமைநயத் தான் மேம்பாடுறும். ஆயதால் இச்சித்தாந்த நிர்வர்ஹகரான தமது விடயத்தைப்பற்றி రామానుజదయాపాత్రం என்கிற பகவத்விடயத்தினை யனுஸந்தித்துப் பின்னர், உடையவர் ஆணையின்படி లక్ష్మీనాథసమారంభాం నాథయామున మధ్యమాం, అస్మదాచార్యపర్యంతాం వందే గురుపరంపరాం என்பதாதிய அனுஸந்தானங்களைப் பண்ணுமா றாணையிட்டருளல்வேண்டுமென்று வேண்டினர். செவிமடுத்தபிள்ளை, 'உடையவரது மாட்சியால் தழைப்புற்று வரும் இச்சித்தாந்த விடயத்தில் புல்லினும் புல்லனான வடியேற்கு மஹிமையே' தெனத் திருவுளங்கூசி நின்றனர். கண்ட திருவோலக்கத்தினர் மனமழுங்கி பெரியபிரானை வேண்ட, இரங்கிய அழகிய மணவாளன்: 'நம்மிராமானுஜ மதஸித்தாந்தமாகிற பயிரைக்களைகொய்து விளைப்பித்த நம் வேதாந்தாரியன் பொருட்டாக రామానుజదయాపాత్రం என்கிற சுலோகத்தை யனுஸந்தித்துப் பின்பு, లక్ష్మీనాథసమారంభాం என்பதாதிய விளம்பக்கடவ' தென அர்ச்சக முகத்தானறைந்தனர். அன்னணமே பலரு மனுஸந்தித்துப் பிள்ளைக்குப் பல்வரிசைகளையுமீந்து உவந்தனர். பிரபந்தமுடிவில் உடையவர் கட்டளையின் வண்ணம் శ్రీమన్ శ్రీరంగ శ్రియమనుపద్రవామనుదినం సంవర్ధయ என்றுச்சரித்த வமயத்து தெள்ளறிஞரான தூப்பிற்பிள்ளையனதை யிருமுறை யுச்சரித்து இவையெல்லாம் அப்புள்ளார் கடாக்ஷவிசேடமென் றுள்ளி யுவப்புடனன்னூர் பொருட்டாவெழுந்த నమో రామానుజార్యాయ என்கிற சுலோகத்தினையும் வாயாறவழுத்த, ஆங்குற்றோர் 'இன்னது ஸம்புடகாயத்ரியின்கணிருந்தது காண்மினென்றும், ப்ரபந்தமுடிவிலே உச்சரிக்கவியல்ற' தெனவுங் கூறி யாஹ்லாத மெய்தினர். ஸ்ரீரங்கநாச்சியார் பேரவாவோடுஅர்ச்சகமுகத்தான் பிள்ளையை விளித்து நீவிர் அடைந்துள்ள பிருதனைத்தையும் செவ்வனே ஆண்டு நங்கோயின் முன்னரேயே காலக்ஷேபாதிகளை செய்துகொண்டிருமென்று கட்டளையிட, பிள்ளையு மங்ஙனே நிகழ்த்திவந்தனர். அவ்வெல்வையில் வரதாரியர் தந்தையின் மேதகவினுக்கு மங்களாசாஸனமாக 'வாழியிராமாநுஜப்பிள்ளான்' என்றும்,—'வஞ்சப்பலசமயம் மாய்க்கவந்தோன் வாழியே' என்றும் இரண்டுபாட்டுக்களையருளிச்செய்ய, பிரமதந்திர ஸ்வதந்திர ஜீயர் 'நானிலமுந்தான்வாழ' என்ற பாட்டினையுமருளிச்செய்ய, ஆண்டிருந்தோ ரிம்மூன்று தனியன்களையும் பிரபந்தமுடிவி லனுஸந்திக்குமாறு வடியோங்களுக்கு வாணையிட்டருளல் வேண்டுமென்றிரக்க, இரங்கிய ஸர்வலோ

கநாயகியான நாச்சியார் அர்ச்சகமுகத்தா லங்ஙனே வாஜ்ஞைபுரிந்தருளினர். நாயகி நியமனமேற்றவவர் ஸர்வதேசதசாகாலே எனத்துவக்கி—‘வேதாந்ததேசிகனே இன்னுமொரு நூற்ருண்டிரும்’ என்னுமளவாக **வாழித்திருநாமஞ்** சாற்றி யனுஸந்தித்து அங்ஙனே திவ்யதேசங்களிலும் திருமாளிகைகளினு மனுஸந்திக்கும்படி நியமித்தனர்.—பின்னர் சித்ரகூட விருத்தாந்தத்தாலும், அத்யயனோத்ஸவ விருத்தாந்தத்தாலும் புல்லர் சில்லோர் ஆற்ருமையும் வெகுளியும் பூண்டு வாரணசியில் யாவுமுணர்ந்திருந்த வித்வானொருவனைத் தெரிந்துபத்திரிகை வாயலாவழைக்க, மாணவர்ஸஹிதனான வன்னோன் பல கோசங்களோடு கச்சியம்பதியை யடைந்து விசிஷ்டாத்வைத ஸிந்தாந்தத்தைப் பலவாத் தூஷித்து ஸ்ரீவைணவர்களையு மதிக்ஷேபஞ் செய்துகொண்டிருந்தனன். ஆங்கே **கடிகாசதகம்அம்மாள்** ஆதிய வேனையோர் தாம் ஸாமாந்ய சாத்திரங்களில் அதிநைபுண்யத்தை யடைந்திருந்தும் ஸ்ரீபாஷ்யாதிவேதாந்தசாஸ்திரங்களில் பரிச்சயமில்லாமையினுல் சில ஸ்ரீவைணவர்கள் மூலமாக கோயிலில் எழுந்தருளியிருக்கும் தேசிகர்பிரானிடத்துவந்து, அடைந்துளான் செய்தியை முற்றுமறைந்தனர். தேசிகர் ஆங்கவனை ஜயஞ்செய்யுமாறு பிரம்மதந்திர ஸ்வதந்திர ஜீயரையேவினர். அங்ஙனமே ஜீயர் திருமலை ஸ்ரீநிவாஸாசாரியராதிய வேனைய முதலிகளோடு ஸ்ரீ கச்சியம்பதியைப் புக்குப் பெருமானைத்தொழுது மண்டபத்திருந்து முன்னர் கூறிய காசிவித்வானோடு எழுநாள் நிகமாந்தத்தில் வாதியற்றி யீற்றிலன்னவனை வென்றனர். மாற்றலன் ரேற்றும் நாணமில்லானுய் ஜீயரை நோக்கி ‘நீவிர் நம்பெயர்க்கியைய என்னைவென்று ஜயம் பெற்றீர் என்பது சாலவுஞ்சரதமே. ஆயினும் எம்மன்னைச் சீதை யினியளைக் களவிடவந்த இராவணனும், சுபத்திரையைக் கொண்டுபோகவந்த அர்ஜ்ஜுனனுமடைந்த ஸங்யாஸித்வத்தைத் தரித்திருக்கையொன்றே தூஷ்யமாயிருப்ப’ தென்றுலெளகிகவாக்யத்தால் ஜீயரைப் பரிபவப் படுத்தினர். (இன்னும் வரும்.)

V. K. அரங்காசாரியர்.

## தென்னுட்டேச் சிரேட்டர்கள் (முதற்பாகம்.)

---

2. தென்னுட்டுச் சிரேட்டர்கள்’- முதற்பாகம். இதிலே மைசூர்மகாராஜா சர். சாமராஜேந்திர உடையார், அவர் மந்திரி C. V. இரங்காச்சார்லு, C. I. E., ராயபஹதூர் A. R. சபாபதி முதலியார், இராஜ சபாபூஷணர்; திருவாங்கூர் மகாராஜா இராமவர்மா G. C. S. I. இராஜா சர் டி. மாதவராயர் K. C. S. I., ஜஸ்டிஸ் ஸர் டி. முத்துசாமி ஐயர் K. C. I. E., பலபாஷாநிபுணர் C. V. இரங்கநாத சாஸ்திரி, தண்டலம் கோபாலராயர் ராய்பஹதூர்: இராய்பஹதூர் சேலம் இராமசாமி முதலியார் M.A.,M.,L., ஆதிய ஒன்பதின்மர் ஜீவிய சரித்திரங்கள் அவரவர் திருவுருவப் படங்களுடன் அடங்கி யிருக்கின்றன. ‘மதராஸ் மெயில்’ ஆதிய பல பத்திரிகைகளாலும், ஜஸ்டிஸ் ஸர். சுப்பிரமணிய ஐயர் முதலியவர்களாலும் நன்கு மதிக்கப்பட்ட சிறந்த புத்தகம் இது. விலை அணு 12. இதனை வேண்டுவோர் **மதராஸ் லிடரரி பூரோசேக்ரடரிக்கு** எழுதினுல் கிடைக்கும்.

## THE GRAND OLD MAN OF TRAVANCORE.

### திருவாங்கூர் ஜாம்புவான்:

## திருமணம் வேதாத்திரீசதாச முதலியார்.

---

இவர் இன்றைக்கு 83 வருஷங்களுக்கு முன்னரே திருநெல்வேலியிலே பேரும் பிரதிஷ்டையும் பெற்ற சுலோசன முதலியாரின் தவப்புதல்வராகப் பிறந்தவர். முதலியார் அக்காலத்திலே எவரும் அதிசயிக்கும்படியாகப் பம்பாய் சென்று எல்பினஸ்டோன் கல்லூரியிலே வாசித்துப் பொற்பதக்க வெகுமதி பெற்றுக் கீர்த்தியோடு தேர்ச்சியடைந்தனர். பம்பாயில் தாமதித்து வாசித்தமையால் நம்மவர் **'பம்பாய்முதலியா'**ரெனப் பெயர் பெறுவார். இவரது நுண்ணறிவை இளமையிலேயே மகாராஜா மார்த்தாண்டவர்மர் அறிந்து முதலியாருடன் அடிக்கடி கூடிக்கலப்பர். இவர் பம்பாயிலே படிக்கும்போதே கவர்னர்விருந்துக்கும் கேளிக்கை யாட்டத்திற்கும் போவர். சென்னை இராஜதானிக் கவர்னர் எல்பின்ஸ்டோன் பிரபு இவருக்குப் பேட்டி கொடுத்து ஆனந்தத்துடன் பேசிக் காலம் போக்கியதுமுண்டு. முதலியார் பிரிட்டிஷ் இராஜாங்கத்திலே டிஸ்திரிக்ட் கோர்ட்டு சிரஸ்தேதார் வேலை வகித்திருந்தார். பிறகு திருவாங்கூர் சமஸ்தானத்து ஜட்ஜியானார். இவரை மெச்சாத மகாராஜாக்களும், ரெவிடண்டுகளும் இருந்திரார்கள். இவருக்குஹைதராபாத்து மந்திரியாக விருந்த நவாப்சர் சாலர் ஜங்கைத்தெரியும். சென்னையிற் சட்டவிருபண சபையின் அங்கியாக விளங்கிக் குடிகளுக்குச் சகல நன்மைகளை விளைத்துக் காலமானகாஜுலு லக்ஷுமீ நரசுசெட்டியாருடன்கூடிச் செட்டியாரின் பத்திரிகையாகிய 'கிரஸண்டை' இவர் நடத்தியவர். பாதிரிகளது அழிம்புகள் அதிலே வெளியானபோது செட்டியாருடன் இவரு:ம் சதுருக்கிழுக்கப்பட்டார். சென்னையிலே சர்வகலா வல்லவராகக் கவினப்பட்ட பூண்டி அரங்கநாதமுதலியாரை இவர் அதிகம் விரும்பினவர். அவருடன்கூடி இவர் பில்லியர்டு ஆட்டம் ஆடுவார். திருவாங்கூர் முதலான சமஸ்தானங்களுக்கு மந்திரியாக விளங்கிய சர். டி. மாதவராயருக்குப் பிராண சிநேசிதர் யாராகிலும் இருந்திருப்பரேல் அவர்தான் இவர். இவ்விருவர்களுக்கும் நடந்துள்ள கடிதப்போக்கு வரவுகளைக் கண்ணுற்றால் ஓர் செய்குன்றுபோலிருக்கும். இவர் தமிழ்ப் பாஷாபிமானி; தமிழ்ப் புலவர் பரிபாலகர்; தருமம் செய்யப் பின்னடையாதவர். தாக்ஷண்ணியம் இவரிடம் செல்லாது. இப்பொழுது சென்னையில் உள்ளவர்களில் இவர் கனம் திவான் பஹதூர் இராஜரத்தின முதலியார் அவர்களையே பெரிதும் விரும்புகிறார். பரஸ்பரம் அப்படியே இருவருக்கும் விசுவாசம் இருக்கின்றது. இவர் இம்மாத முதலில் சதாபிஷேகம் செய்து கொண்டனர். சொர்னதானம், கோதானம், வஸ்தரதான மாதியதானஞ் செய்தனர். உணவளித்தனர். இவர் நூறுவயது குறையாது ஜீவிப்பாராக! இக்காலத்திலே நீண்ட வயதினர் காணக்கிட்டார்கள். வயதும், அறிவும், பெருமையும், செல்வாக்கும், அடுத்தோர்க்காதரனை செய்யும் பேரெண்ணமும், கொண்டு நாடனைத்தினும் நீடிய புகழ்பரக்க வாழ்பவரைக் கைவிரல்விட்டு எண்ணலாமன்றோ! அத்தகைத்தானவர்களில் இவர் ஒருவர். இவராற் பயனடைபவர் பலர்; பலரும் பலதுறைப் படிந்துள்ளவர்களே.

K. C. D.

# EDITORIAL NOTES.
## புத்திராதிபர் குறிப்புக்கள்.

"**இந்தியா கல்வியில் பெருங்குறை**" என்று பெயரிட்ட புத்தகமொன்றை டாக்டர் மர்டாக் பிரசுரத்திருக்கின்றனர். இது கலவைக்கூட்டாயினும் இதில் அருமையான சங்கதிகள் காணப்படும். ஜாதியார்களின் புத்தி தீக்ஷண்யத்திற்கும் நாகரீகத்திற்குந் தக்கபடி நன்னெறிப்படிப்பு ஏற்படாதிருத்தலே இவர் கூறும் பெருங்குறையாம். சுயபாஷை நூல்களில் நல்வழி புகட்டும் நூல்களே சிறந்து விளங்குகின்றன.

**புரவின்ஷல்கான்பரன்ஸ்:** இராணிப்பட்டையில் இம்மதி 23, 24, 25, உகளின் கூடியது. திவான்பஹதூர் K. கிருஷ்ணசாமிராவ் C.I.E. சபாநாயகம் வகித்திருந்தார். இராயரது பிரசங்கத்தின்சில அம்சங்களை அடுத்தசஞ்சிகையில் வெளிப்படுத்துவோமாக. இதனைக்கூடியே பொருட்காக்ஷிசபையுமொன்றுநடந்தது. அதற்கு ஜில்லா கலெக்டர் மெத்த அனுதாபியாயிருந்தமையால், பொருட்காக்ஷிகள் ஒவ்வொன்றும் அதிசயிக்கும் படியாகவே இருந்தது. நாட்டில் யாதானுமொன்று சீர்பெற நடந்தேறவேண்டுமானல், ஆள்வோரும் ஆளப்படுவோரும் ஒன்றுகூடி உழைக்கவேண்டும். அவ்விதம் உழைத்தாலொழிய வெற்றிவராது.

**மிஸ்டர் தாதாவின் மரணம்:**—தாதாவென்பார் ஓர் தாதாவாகவே இருந்தனர். இவர் கோடீஸ்வரர்; தயாளு; சுதேசாபிமானி. இந்துநாட்டவர்களின் மேம்பாட்டிற்காகவே வாழ்ந்தவர். ஓர்பெரிய கலாசங்கம் ஸ்தாபித்தருளும் பொருட்டுத் தமது ஆஸ்தியின் பெரும்பாகத்தை அன்பார்ந்து அளித்தவர். தற்பெருமையும் பெருமிதமும் அற்றவர். கடைசிக்காலத்தில் இரும்புவிளையுங்களன்களைச் செப்பனிட்டு இந்தியர்களைக்கொண்டு அவ்வியாபாரத்தைப் பெருக்கவேண்டுமெனப் பேரெண்ணம் வைத்தவர். அது காரணமாக ஐரோப்பிய நாடுகளுக்கு யாத்திரைபோனர். ஜர்மானியில் தாதா விருக்கும்போது காலன் அவராருயிரைக் கொள்ளைகொண்டான். தாதாவின் புலாலுடல் அழிந்தது உண்மையே. ஆயினும் அவர் புகழுடம்பினுக் கழிவுமுண்டோ?

**மின்சார அற்புதம்:**—மின்சாரத்தைக்கொண்டு என்னென்ன செய்கிறார்கள்? மின்சாரமே முன்தபால்; அதுவே டிராம்வண்டி. அதனைக்கொண்டே சமையல் செய்கிறார்கள். மின்சார விசையால் தண்ணீர் இழுக்கிறார்கள். அலூமினியம் ஆகிய பற்பல சாமான்களை ஏராளமாகச் செய்கிறார்கள். இவையெல்லாம் பழங்கதைகள். புதுச்செய்தி ஒன்றுண்டு. அதாவது மின்சாரசக்தியைக்கொண்டு மாட்டின் பாலைக்கறக்கும் விதத்தை ஒருவர் இப்பொழுது கண்டுபிடித்திருக்கிறாராம். ஒரு பட்டிமாட்டின் பாலை எல்லாம் ஏககாலத்தில் ஒரேவிதமாக அதிலேசிற் கறந்துவிடலாமாம். என்ன அதிசயம் பாருங்கள்! மின்சாரத்தால் நலம் பல விளைகின்றனவே!

**வைஸ் சான்ஸலர்:**—சென்னை சர்வகலா சங்கத்தாரின் வைஸ் சான்சலராகக் கனம் ஜஸ்டிஸ் எஸ். சுப்பிரமணிய ஐயர் நியமனமடைந்துள்ளது தமிழர் அனைவருக்கும் கௌரவ மிகுந்தகாரியமே. சென்னையூனிவர்ஸிடிக்கு இவர்தான் இது வேலையை முதலில் வகித்துள்ளவர். ஐயர் தற்போது பிரதம ஜட்ஜியாகவும் விளக்கமுற்றுவருகிறார். இத்துடன் இவர் மூன்றுமுறை பிரதம ஜட்ஜிவேலையை வகித்துப் பார்த்தாய்விட்டது. கவர்ன்மெண்

டாரிடம் நல்லபிப்பிராயமும் பெற்றவர்; நல்லதேர்ச்சி யுடையவர். இவரைப் பின்பற்றியே பஞ்சாப் யூனிவர்விடிக்கும் அவ்விடத்திய ஜட்ஜி ஒருவர்வைஸ் சான்சலராகியுள்ளார். சுதேசிகள் இன்னன உயர்பதவியடைவது நாட்டிற்கு மேம்பாடெனக.

"நாஷனல் இந்தியன் அஸோஸியேஷன்" என்ற சபையின் வருடோ ற்சவம் போனமீ 22உ வெள்ளிக்கிழமைநடந்தேறியது. கனம்பென்சன் அக்கிராசனம் வகித்தனர். N. சுப்பிரமணியம் 1903-ம் வருடத்தின் அறிக்கைப் பத்திரம் வாசித்தனர். இச்சங்கத்தின் முக்கியகருத்து பெண்கல்வி விருத்தி பெண்பாடசாலைகளை ஸ்தாபிப்பதும் வீடுகளில் பெண்களுக்கு சொல்லிக்கொடுப்பதும் இப்பயன் விளைவிக்கும் நல்வழிகளாம். மைலாப்பூரிலுள்ள பெண்பாடசாலையை ஹிந்துக்கம்மிட்டியாரிடம் ஒப்புவித்தலைப்பற்றி வக்கீல் கிருஷ்ணசாமி ஐயர் பேசினர். அதற்காக 6000 ரூபாய் கையொப்பமாயிருப்பதாகவும் இரண்டுமூன்று மாதங்களில் இத்தொகை வசூலாகிவிடுமென்றுங் கூறினர். திருவனந்தபுரத்திலுள்ளபடி பெண்களுக்கு உயர்தரக் கல்விசாலை அத்தியாவசியகமென்றும் அதற்கு இது தக்ககாலமென்றும் வக்கீல் பி. ஆர். சுந்தரமையர் பிரசங்கித்தனர். அப்படி ஏதேனுஞ் செய்கிறதாயிருந்தால் சர்க்காரே செய்தால் நலம் என்றனர் சுப்பிரமணியம். பெண்களுக்குப் போதுமான உதவிகொடுத்துப் படிக்கவைக்கவேண்டும். சர்க்காருக்கு வழிகாட்டி மனுச்செய்தால் பெண்கல்வி விருத்திக்குவேண்டிய திரவியசகாயஞ்செய்வார்களென்பது உறுதி. இதன் பின் பெண் கல்வியைப்பற்றி சமஸ்கிருத பண்டிதராகிய அரங்காசாரியார் எம். ஏ. விஸ்தாரமாகப் பேசினர். பெண்கள் ஆண் மக்களின் நற்குணத்தைக் காப்பாற்றுபவர். பரம்பரை நன்மை வாய்ந்த வழக்கங்களை வழுவவிடாமல் காத்துக்கொள்பவர் அன்னரே. ஆதலால் அவர்களுக்கு அரசவிசுவாசத்தையும் சத்தியம் சுயாதீனம் நல்லறிவு இவற்றையுந்தரத்தக்க கல்வியைப்புகட்டுதல் அவசியம். இந்நாட்டுப் பெண்களின் உடை நேர்த்தியாயிருப்பதால் புறநாட்டாரைப் பின்பற்றுதல் அத்துணைச் சிறப்பின்று என்று போரன் மனைவி கூறினதுண்மையே. காலத்திற் கேற்றபடி நாகரீகமாறுதல் சகஜம். புராதன வழியே சிறந்ததென்றாயினும், புதுமார்க்கமே சிறந்ததென்றாயினும், பிடிவாதஞ் செய்தல் விருத்திக்கிழுக்காம். காளிதாசர் நாடகத்தின் கதாநாயகியும மகாபாரதத்தில் கூறியுள்ள சகுந்தலையும் ஒருத்தியே யானாலும் எத்துணை வித்தியாசம் காணப்படுகிறதென்பதே இதற்குச்சான்றாம். பழையன கழியுங்காலவகையால் பழையனவழித்தல் நம்முடைய கருமமன்று; பழையன புதுக்குதல் நம்மவர் தருமமாம். ஆங்கிலேயப் பெண்பாலர் ஒற்றுமையும் நற்குணமும் வாய்ந்து நாயகர்கட்குத் தக்கதுணைகளாயிருப்பதை நாம் தினசரி பார்க்கின்றோம், அதை மறத்தல் இயலாது. கண்ணுடையார் பாராதிரார். அன்றியும் வன்மையையும் உண்மையையும் கணப்பொழுதில் கண்டுகொள்ளும் அபாரசத்தி பெண்களுக்கு இயற்கையிலமைந்துளது. இவ்வல்லமை பெருகினல் தேசத்தார் கேடுளர். உணத்தேடுதல் ஆண்மக்கள் கடன். வீட்டைச் சுத்தமாக வைத்தல் பெண்களின் கடமை. உலகத்தில் வேலை செய்து கஷ்டப்படுதல் பெண்களில் பெரும்பாலருக்கு மில்லை. ஆதலால் அவர்களுடைய ஆத்துமா தீயகுணங்களால் பீடிக்கப்படாமல் சுத்தமாகவிருத்தல் கூடும். பெண்களும் உதர நிமித்தம் வெளியிறங்கி வேலைசெய்யப்புகுந்தால் இயற்கை வனப்பும் சத்தியும் ஆத்துமசத்தியும் குன்றும். இவ்வபாயத்தினில்

நம்பெண்கள் அகப்பட்டுக்கொள்ளாதிருக்கவேண்டும். கற்ற தாய்கள் வீட்டைச் சுசியாய்வைப்பார்கள். குழந்தைகளை நன்னெறியில்பயிற்றுவார்கள். சில காலத்திற்கு முன் பெண் கல்வியென்றால் காததூரம் ஓடி ஒழித்தனர். தற்காலத்தில் அது தேவையானதென்று முன்வந்து இறங்குகின்றனர். இதுவே விருத்திக்கு நல்லகாலமாம். ஆங்கிலேய ஸ்திரீகளும் கைகொடுத்துதவச் சித்தமாயிருக்கின்றனர். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுதல் நம்முடைய தவறுக்கடமையாகும்.

## REVIEWS OF BOOK

## புத்தகக்குறிப்புக்கள்.

**சாவித்திரி, திருத்தணிகை யாத்திரை:**—இவ்விரண்டு புத்தகங்களைப்பளியிட்டவர் பிரபஞ்ச மித்திரன் பத்திராசிரியர் ம-ா-ா-ஸ்ரீ லோகநாதசெட்டியார். 'சாவித்திரி' விச்சூர் முத்துக் குமாரசாமிமுதலியாரால் எழுதப்பட்ட புத்தகம். செட்டியாரது பதிப்பு இரண்டாவதாகும். எனவே முதற்பதிப்புப் பிரதியினைப் படிப்போர் ஏற்றுப்படித்துள்ளார்கள் எனத் தெரிகின்றது. அது ஒரு நல்ல புத்தகமே. செட்டியாரும் அதனை நலமாக்கவே அச்சியற்றியுள்ளார். பிந்திய யாத்திரைப் புத்தகம் நூதனமானது. ஞானவொழுக்கங்களைக் கதைவாயிலாகவும் உதாரண வாயிலாகவும் சம்பாஷணைவாயிலாகவும் இதிலேபரக்கக் காணலாம். வெள்ளையான நடையில் பாமரர்களுக்கும் விளங்கும்படியாக ஸ்ரீபானுகவிசுவாமிகள் எழுதிப் படிப்போர் மனதைக்குளிரவைத்திருக்கிறார். இதனைவாங்கிப்படிப்பது அவசியமே. படங்கள் பல இப்புத்தகத்திலேயடங்கியுள்ளன. இதன் விலை அணா 12 வேண்டியவர்கள் **சென்னபட்டணம் அம்பர்சன் வீதி 8 ம். நெ. வீட்டு மதராஸ் லிடரி பூரோ** செக்ரடேரிக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். ஞானபோதினிச் சந்தாதாரர்களுக்கு ஷை செட்டியார் சாவித்திரியை அணா எட்டுவீதம் விலை விதித்துள்ளர். வேண்டுவோர் உடனுக்குடனே மேற்கண்ட செக்ரடெரிக்கு எழுதிக்கொள்ளவும்.

2. **பன்னிரு பெண்மணிகள்:**-'இந்துநேசன்'கூறுவதாவது:-இஃதோர்சிறிய புத்தகம்; இப்பெயரை ஓதுகையிலே இது பன்னிருபெண் மணிகளைப் பற்றிய விஷயங்கள் கொண்டதென எளிதில் ஒருவர்க்குப் புலப்படும். இதனை இயற்றினர். 'ஞானபோதினி' என்னும் மதாந்தத் தமிழ்ப் பத்திரியைகன் ஆசிரியரும், கோயமுத்தூரிலுள்ள ஸென்ட் மைக்கேல் கலாசாலை ஆங்கில ஆசிரியருமான மிஸ்டர் M. S. பூர்ணலிங்கம் பிள்ளையாவர். ஒவலியா, டெஸ்டிமோனு, கார்டெலியா, மெகபெத் பிராட்டி, காதரீனு, இமேஜன், ஹெர்மியோன், ஹெலினு, ரோஸலிண்டு, இஸ்பெல்லா, வயலோ, போர்ஷியா முதலாயினோரே இப்புத்தகத்திற் குறிப்பிடப்பட்டிருக்கும் பன்னிரு பெண்பாலராவர்; இவர்களில் முதல் நால்வர் ஆங்கில கவிசிரேஷ்டரும் விசித்திர பிராபல்ய நாடகங்களை எழுதுவதிற் புனிதருமான வில்லியம் ஷேக்ஸ்பியர் இயற்றிய ஹாம்லெத், ஒதெல்லோ, லீயர், மெக்பெத் என்னும் நாடகங்களில் குறிப்பிட்டுள்ள மாதர்கள்; பின்னவர் அவரது வேறு எட்டு நாடகங்களிலுள்ளோர். ஒவ்வொரு கதையிலும் ஒவ்வொருஸ்திரீயும் தெரிந்துகொள்ளக்கூடிய வெவ்வேறு குணவிசேஷங்கள் தென்படுகின்றன. இக்கதைகள் சிறுமியர் எளிதி லறிந்துகொள்ளக்கூடிய தெளிவான தமிழ் நடையில் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கின்றன. நல்ல பளபளப்பான காகிதத்தில் பெரிய வெழுத்துக்களில் இப்புத்தகம் அச்சிட்டிருக்கின்றது. விலை அணா 6. **மதராஸ் லிடரி பூரோவுக்கு** எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## ACKNOWLEDGMENTS.

## கைக்கு வந்துள்ள புத்தகங்கள்.

மைசூர் அரசு. முதல் இரண்டு பாகங்கள் (மைசூர் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீனிவாசாசாரியர் இயற்றியவை).

## TAMIL MONTHLIES.

## மாதத்தமிழ்ப் பத்திரிகைகளி னுள்ளுரைகள்.

1. **செந்தமிழ்.** பங்குனிமீ. மதுரை. வருஷசந்தா ரூ. 4
வெள்ளவீதியார்—பத்திராசியர்.
இலக்கணவாராய்ச்சி—அ. குமாரசுவாமிப்பிள்ளை.
ஆகுபெயரன்மொழித்தொகைஆராய்ச்சி—நா. வேதாசலம்பிள்ளை.
பல்லவ சக்கரவர்த்திகள்—ம-ா-ா-ஸ்ரீநிவாஸையங்கார்
சிலப்பதிகார மணிமேகலைகளின் பிறப்பிடம் யாது— } தா. பொன்னம்பலம் பிள்ளை M. R. A. S.
கவிமரபு—சுந்தரராஜ சர்மா.
புத்தகக் குறுப்பு—பத்திராசிரியர்
அநுமான விளக்கம்—திருநாராயணையங்கார்
பன்னிருபாட்டியல் (முற்றும்)
திணைமாலை நூற்றைம்பது—கணிமேதவியார்.

2. **விவேகபாநு.** எப்ரல் மீ. மதுரை. வருஷசந்தா ரூ. 2
வித்தியா விஷயமாய்க் கவர்ன்மெண்டாரது தீர்மானங்கள்—பத்திராதிபர்
ஜகத்ஜோதி—எஸ். சாமிநாதையர்
மேனாட்டுக்கலைஞானம்—
ஹெலெனும்பாள்
மனிதனது எழு கூறு
மனோன்மணி பூஜைக்கு மதுமாமிசம் அவசியமா?
} தி. மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை பி.ஏ.
தர்மிலோபி சம்வாதம்—சே. கு. விசாகப்பெருமாள் முதலியார்.
சைவசித்தாந்தம்—சுப்பிரமணிய பிள்ளை.
இன்னிசை இருநூறு—அ. சண்முகம்பிள்ளை.
அன்பு—உ. சிதம்பரம் பிள்ளை.
புத்தகக் குறிப்பு—சமாசாரக்கொத்து—பத்திராதிபர்,

3. **மாதர் மனோரஞ்சினி:**—எப்பிரல்மீ—சென்னை—வருஷசந்தா ரூ. 1¾
எச். இ ஆம் தில் பெருமாட்டியாரின் மருத்துவசாலை—பத்திராதிபர்
ஸ்திரீகளின் புத்தி கூர்மை—பார்வதிபாகன்
வீட்டுவேலை—ஓர்மாது
அநுசூயார்—பத்திராதிபர்
குடும்பசம்ரக்ஷணை—ஜலம்—C-S-R.
பெண்மையின் கருத்து.—R. எகாம்பர ஐயர்
மருத்துவநூல்—சோதனை
சத்தியமே நமது குலதெய்வம்—கோபால ஐயங்கார் பி. ஏ.
பொற்கிளி—பாட்டன்
உத்தராம சரித்திரம்—குசலவாக்கியம்—.சுப்புலக்ஷ்மி யம்மாள்
சிறுவருக்கான கதை—சமாசாரக் குறிப்பு

## NOTICE.

In future, all literary Contributions, Books for review, &c., &c., should be addressed to the Secretary '*Madras Literary Bureau,*' Umpherson Street, Black Town, Madras.

2. Exchange Journals, Newspapers also should be sent to the same address.
3. All remittances should be made payable to
 The Secretary—'*Madras Literary Bureau.*'

---

## சந்தாதாரர்கள்.

ஞானபோதினியின் சந்தாவை இதுவரை அனுப்பித் தராதவர்கள் இது கண்டதும் அனுப்பத் தயை கூர்வார்களாக. இன்றேல், அடுத்த சஞ்சிகையை வி. பி. ல். அனுப்புவோம். சந்தாவைச் செலுத்திப்பத்திரிகையை பெற்று ஆதரிப்பார்களாக.

MADRAS LITERARY BUREAU,
8, UMPHERSON STREET, MADRAS,
*May* 1904.

*The Secretary.*

Thompson and Co., Printers, Madras.

# Works by T. Ramakrishna.

**'Padmini—'** An Indian Ramance with an Introduction by the Right Hon'ble Dr. James Bryce, D. C. L., M. P. It is a veritable treasury of Hindu Folklore' Price per copy Rs. 2-8-0.

**'Tales of Ind'** and other Poems—Rs. 2-8.

Copies can be had from The Secretary—'*Madras Literary Bureau.*

---

## "THE TAMILS 1800 YEARS AGO"

**Rs. Five (5) only Postage Extra.**

"The author gives a graphic account of the ancient geography of the land of the Tamils, their early commercial relations with foreign nations, the different peoples who spoke Tamil, the political history of the Tamils, and concludes with a brief divid description of their social life, mode of warfare, literature, philosophy and religion. The chapter of Tamil poets and their poems displays the erudition of the author, and the extent of his research into the vast field of Tamil literature."—*The Madras Mail* leader of the 13th May 1904.

"For a book of the kind the materials must be collected from various sources, and when they are collected they have to be so arrnged that the lesson to be drawn and the narrative itself may be clear and of no doubtful import. Mr. Kanakasabhai has accomplished all this and he deserves to be congratulated on the success of his labours. He has rendered a public service of no small value."—*The Madras Standard.*

"The book will be welcomed as a valuable addition to the Library:"—*The Times of Ceylon.*

For copies apply to the Secretary to the 'Madras Literary Bureau,' 8 Umpherson Street, Black Town, Madras.

---

# TAMIL BOOKS.

1. **'தென்னாட்டுச் சிரேட்டர்கள்'** (முதற்பாகம்)—இதிலே ஒன்பதின்மர் ஜீவிய சரித்திரங்கள் அவரவர் திருவுருவப் படங்களுடன் நற்றமிழ் இனிய நடையில் எழுதப்பட்டுள்ளன, விலை அணா 12.

2. **'திருத்தணிகையாத்திரை'**:—இதிலே ஞான ஒழுக்கமும், திருத்தணிகை மான்மியமும், இன்னும் பலவும் தெள்ளிய தமிழில் உண்டு. படித்துப்பயனடையலாம். விலை அணா 12,

3. **'சாவித்திரி'**:—ஓர் நற்கதை. கற்பரசியின் சரித்திரம் வித்தரித்து எழுதப்பட்டிருக்கின்றது. இதன் விலை அணா 10. ஆயினும் ஞானபோதினிச் சந்தாதாரர்களுக்கு மட்டும் விலை அணா 5.

4. **'விக்டோரியா மெய்க்கீர்த்தி'**:—விக்டோரியா மகாராணியார் மீது பாடப்பட்ட புகழ்மாலை இது. இதிலே அரியபெரிய செய்திகள் பலஅடங்கியுள்ளன. பிரபந்தம் அகவற்பாவால்அமைந்தது; விக்டோரியாவின் ஜனனமும், சரித்திரமும் நல்ல வசனத்தில் எழுதப்பட்டுள்ளன. இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு சகலத்திற்கும் உண்டு. பம்பாய்ஹை கோர்ட்டு ஜட்ஜி கனம் சந்திரவர்க்கர் இதற்கோர் இங்கிலீஷ் பாயிரம் எழுதியுள்ளார். இதன் விலை அணா 12.

5. **'பன்னிருபெண்மணிகள்'**:—ஷேக்ஸ்பியர் நாடகமாதர்கள் இன்னோராவார். இதிலே பலவகைப்பட்ட பெண்மணிகளின் சரிதைகள் அடங்கியுள்ளன. பெண்பாலார்க்கு மேனாட்டுமாதர்சரிதம் புகட்டுதற் கேற்ற புத்தகம் இதுவே. ஒவ்வொருமாதும் கையில் ஏற்றுப்படித்துப் புத்தகப்பெட்டியிற் பதனப்படுத்தி வைக்கத்தகுந்த சிறந்த புத்தகம் இதுதான். விலை அணா 6. புத்தகங்கள் வி. பி. ல். அனுப்பப்படும்.—

முற்குறித்த புத்தகங்களை வேண்டுவோர் மதராஸ் லிடரரி பூரோ செக்ரடரிக்கு எழுதிக்கொள்ளலாம்.

IN THE PRESS

## *Will be Ready Immediately.*

A PRIMER OF

## 'TAMIL LITERATURE.'

The first attempt of its kind. It is a critical and historical Survey of Tamil Literature up to date. Price per Copy Re. 1. To Early Subscribers As. 12 only. Please register your name at the Madras Literary Bureau,' Madras.

அச்சிலிருக்கின்றது.

## லலிதா ஸஹஸ்ர நாமம்.

இது பாஸ்கரராயர் மகாபாஷிய சங்கிரகத்தோடு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சேறி வருகின்றது. இது தேவி ஸ்தோத்திரம் ஆதலால் இதிலே தேவியின் ஓராயிர நாமங்களையும் பாஸ்கரராயர் பாஷியத்தோடு தமிழர் படித்து, யோக இரகசியத்தையும், புராணகதைகளையும், மந்திர சாஸ்திரபாகங்களையும், மோக்ஷ வழிகளையும் நன்கு அறியலாம். இதன் விலை ரூ 2—0—0. இப்பொழுது பெயரைப் பதிவு செய்து கொள்பவர்களுக்கு ரூ 1—8—0. உடனே மதராஸிலிருக்கும் மதராஸ் லிடரரி பூரோ செக்ரடரிக்கு எழுதிக்கொள்ளவும்.

---

## SPECIAL ANNOUNCEMENT.

# 'Antiquity of the Tamils'

A SERIES OF CONTRIBUTION SPECIALLY WRITTEN FOR THE 'JNANA BODHINI,'

BY V. KANAKASABHAI PILLAI, ESQ., B.A., B.L.,

*Author of 'The Tamils 1800 years ago' and Chief Examiner in Tamil for the University of Madras.*

## விசேட விளம்பரம்.

'தமிழர் பழமை'

இது ம-ா-ா-ஸ்ரீ வி. கனகசபை பிள்ளையவர்களால் ஞானபோதினிக்கென்றே எழுதப்படும் தொடர்வியாசம். ஞானபோதினியில் 'தமிழர்பழமை' அடுத்த சஞ்சிகை முதல் வெளிப்படும்.

தமிழர்பழமை' ஐந்து பேரதிகாரங்களைக் கொண்டது. அவைதாம் (1) தமிழ் மொழி; (2) தமிழ் எழுத்து; (3) தமிழ் குடியேற்றம்; (4) தமிழ் மூவேந்தர்; (5) கடைச்சங்க வரலாறு.

இவை யொவ்வொன்றும் விசேட கருத்துக்களை உள்ளடக்கிப் படிப்போர் பயனோடு படித்துப் போற்றுமாறு எழுதப் பெற்றது. ஆங்கில மொழியினந்த மறிந்ததோடு ஆரிய திராவிட பாஷா நலமுந் தெரிந்தவர் பிள்ளையாதலால் எடுத்துள்ள விஷயங்களைத் தமிழ் நடைக்கிணக்கித் தமிழருக்கேற்ற வண்ணமே எழுதி வருவார் என்பது சரதம்.